பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 11 திங்கட்கிழமை (25.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 180

# ஐ.நா. செயலரைச் சந்தித்துப் பேச கூட்டமைப்புக்கு அனுமதி மறுப்பு

## அரசின் திட்டமிட்ட செயல் என்று கண்டனம்

கொழும்பு, மே 25

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ - மூனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சந்திப்பதற்கு அரசு அனுமதி மறுத்துவிட்டதாக அக்கட்சி தெரிவித்திருக்கின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்டமை அரசின் திட்டமிட்ட செயல் என்று கண்டனம் தெரிவித்திருக்கின்றார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இதுபோன்ற பயங்கரக் காட்சிகளை இதுவரை எங்குமே கண்டதில்லை

### வன்னி நிலைமை குறித்து ஐ.நா. செயலர் பேரதிர்ச்சி



கொழும்பு, மே 25

வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களுக்கும், வன்னியில் மோதல் நடைபெற்ற பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன், அங்கு தாம் கண்ட காட்சிகள் பயங்கரமானவையாக உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விஜயத்தின் பின்னர் அது குறித்து சி.என்.என். தொலைக்காட்சிக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பான் கீ-மூன், இதனைத் தெரிவித்துள்ளார்.

"நான் உலகம் முழுவதும் சுற்றுப் பயணம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போர்க் களத்தில் உயிர்துறந்தார் என அறிவிப்பு

### சர்வதேச இணைப்பாளர் பத்மநாதன் பேட்டி



லண்டன், மே 25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த 17 ஆம் திகதி இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் உயிர்துறந்தார் என்று அந்த அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் செல்வராசா பத்மநாதன் தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

செல்வராசா பத்மநாதன் தமது பேட்டியில் கூறியதாவது:-

எமது தலைவர், எமது

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,மே 25

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று திங்கட்கிழமை நடைபெற மாட்டாது என்றும்-

நாளை செவ்வாய்க்கிழமை கப்பல் சேவை நடைபெறும் என்றும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தது.

இன்று திங்கட்கிழமை கப்பல் பயணத்துக்கெனப் பதிவுசெய்தவர்களுக்கு பயண வசதி செய்து கொடுக்கப்படும். நாளை காலையில் நேரகாலத்துடன் ரயில் நிலையத்துக்கு வருகைதந்து தமது பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்வது உகந்தது எனவும் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

## இந்தோனேஷியாவில் கைதான இலங்கையர்கள் உண்ணாவிரதம்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு கடல் மார்க்கமாகச் செல்லமுற்பட்டு, இந்தோனேஷிய கடலோர காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட 55 இலங்கையர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தங்களை விடுவித்து விரைவில் நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு கோரியே இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவிற்கு கடந்த வாரமளவில் குறித்த இலங்கையர்கள் சென்றபோது இந்தோனிஷிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயர்தர மாணவர்களே!
உதயன் வழங்கும்
கல்விச் சுடரில்
உங்களுக்குரிய விசேட வழிகாட்டி
நாளை வெளிவரும்

## பத்மநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை துரோகத்தனமானது என்கிறார் நெடுமாறன்



சென்னை, மே 25

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து பத்மநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை நம்பத்தகுந்தது அல்ல; துரோகத்தனமானது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயல

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களிலுள்ள புலிகளை அகற்றிய பின்னரே ஐ.நா. பணியாளர்களை அங்கு செல்ல அரசு அனுமதிக்கும்

கொழும்பு, மே 25

வவுனியா அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் இருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களை இனங்கண்டு அகற்றிய பின்னரே இந்த முகாம்களுக்குள் செல்வதற்கு ஐக்கிய நாடுகள் மனிதாபிமான அமைப்புகளின் பணியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை நலன்புரி முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் இந்த முகாம்களுக்குச் செல்வதற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கனகரட்ணம் எம்.பியை விடுவிக்க தமிழ்க் கூட்டமைப்பினர் முயற்சி

கொழும்பு, மே 25

குற்றப்புலனாய்வுத் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சதாசிவம் கனகரட்ணத்தை விடுதலை செய்வது தொடர்பில் இன்று கூட்டமைப்பினர் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளனர்.

இது தொடர்பாக கூட்டமைப்பு எம்.பி. அரியநேந்திரன் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

கடந்த எட்டு மாதங்களாக கனகரட்ணம் எம்.பி. வன்னியில் தங்கியிருந்து வன்னி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் பணியாற்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி

### பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தகவல்

கொழும்பு, மே 25

வவுனியா மற்றும் இதர பகுதிகளிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் பணியாற்ற சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அனுமதித்துள்ளோம். இதனை வவுனியாவிற்கு விஜயம் செய்த பான் கீ மூனிற்கும் தெரிவித்திருக்கிறோம். அங்கு யு.என்.எச்.சி.ஆர் உட்பட சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என சுமார் 52 நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிரோட், கொலிங்வூட் பந்து வீச்சில் அசத்தல் 160 ஓட்டங்களுடன் சுருண்டது மேற்கிந்தியத் தீவுகள்

பிறிஸ்டல்,மே 25

கொலிங்வூட், பிரோட் பந்துவீச்சில் அசத்தியதால். இங்கிலாந்து அணி 6விக்கெட்டுகளால் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 எனும் நிலையில் முன்னிலையில் உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான 'நட்வெஸ்' தொடரின் இரண்டாவது சாவதேச ஒரு நாள் போட்டி நேற்று பிறிஸ்டலில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் 38.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையம் இழந்து 160ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிராவோ,கிறிஸ்கெயல் ஆகியோரே சிறப்பாகச் செயற்பட்டனர். பிராவோ தனது 3ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கிறிஸ்கெய்ல் 31, சந்தர்போல் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சயி ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் இரட்டை எண்களுக்குள்ளேயே ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் பிரோட் 4 விக்கெட்டுக்களையும் கொலிங்வூட் 3 விக்கெட்டுக்களையும் ஸ்வான் பிரஸ்னன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 36 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

போபரா 43 ஓட்டங்களையும் ஷா 38 ஓட்டங்களையும் கொலிங்வூட் ஆட்டமிழக்காமல் 47ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ரெய்லர், சயி, பிராவோ தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் கலக்கிய கொலிங்வூட் தெரிவானார்.

# ஐரோப்பிய விஜயம் தொடர்பாக ரணில் ஊடகங்களுக்கு விளக்கம்

கொழும்பு,மே 25

நாட்டுக்குத் துரோகம் இழைக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டார் என்று அரசால் குற்றஞ்சாட்டப்படும் நிலையில், அவ்விஜயம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க இன்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அவரது ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு நாடு திரும்பினார்.

அவரது விஜயம் தொடர்பாக அரசால் மோசமான விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருவதால், இன்று அவர் அவரது விஜயத்தின் உண்மையான நோக்கத்தை ஊடகங்களுக்குத் தெரிவிக்கத் திட்டமிட்டுள்ளார் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு-07 ,கேம்பிரிஜ் டெரஸில் உள்ள அவரின் அலுவலகத்தில் இன்று காலை 11.30 மணிக்கு நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டே ரணில் ஐரோப்பிய விஜயத்தின் நோக்கத்தை ஊடகங்களுக்குத் தெரிவிப்பார் என்று ஐ.தே.கட்சின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

(அ-சி)

# பத்மநாதன் எம்.பியின் இறுதிக்கிரியைகள் இன்று

காலஞ்சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட எம்.பி. கனகசபை பத்மநாதனின் இறுதிக் கிரியை இன்று பிற்பகல் அம்பாறை தம்பிலுவில் இந்து மயானத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சென்னை மருத்துவமனையில் காலமான இவரின் பூதவுடல் சனிக்கிழமை கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை அவரின் பூதவுடல் அம்பாறை, காரைதீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அவரின் சகோதரியின் இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் நேற்று அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இன்று பிற்பகல் அன்னாரின் பூதவுடல் தம்பிலுவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதிக்கிரியை இடம்பெறும். (சி)

## விழிநீர் சொரிய அஞ்சலித்தோம்



அருட்பணி
மரியாம்பிள்ளை
ததேயுஸ் சரத்ஜீவன்

யாழ். மறைமாவட்ட அருட்பணியாளனும் தூய மரியன்னை பேராலயப் பங்கு மகனுமாகிய அருட்பணி. மரியாம்பிள்ளை ததேயுஸ் சரத்ஜீவன் அடிகளின் திடீர் மறைவு கேட்டு எம் இதயம் நிறைந்த அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவால் பெருந்துயர் அடையும் தாய், சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறும் அதேநேரம் அவரின் ஆன்மா இறைசந்நிதானம் இன்புற்றிருக்க இறைஅருள் வேண்டுகின்றோம்.

தூய மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

பங்குத் தந்தையர்களும்
பங்குமக்களும்.

# சித்தன்கேணியில் நிழற்குடை அமைப்பு

சித்தன்கேணி, மே 25

வடலியடைப்பு இராணுவ முகாம் படையினரால் பண்டத்தரிப்பு - சித்தன்கேணி வீதியில் உள்ள பயணிகள் நிழற்குடை அமைக்கப்படுகிறது.

இதுவரை காலமும் வீதியோரத்தில் நின்று பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பஸ்ஸிற்காக காத்திருந்ததை அவதானித்த இராவணுவத்தினர் அவர்களின் நலன்கருதி இந்த நிழற்குடையை அமைத்துள்ளனர்.

(1-112)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17
02
1938



இறப்பு
04
06
2008

அமரர் மங்கவேஸ்வரி

அன்பின் திரு உருவாம்
பாசத்தின் உறைவிடமாம்
நேசமுடன் பாரிலே
என்றும் எமக்கோர் ஒளி விளக்காய்
வாழ வழி தந்த தாய் என்ற
அகல் தீபம் அணைந்து
இருள் ஆன என்வாழ்வு ஓர் ஆண்டு
கழிந்ததம்மா மறவேன்
பல ஆண்டு

துரை வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில்.

க.அருணகிரிநாதன்
(மகன்).

# தரம் 5 கற்றல் இறுவட்டு: புதன் வெளியிடப்படும்

அச்சுவேலி, மே 25

தரம் 5 கணிதம் கற்றல் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நீர்வேலி அணியப் பாடசாலை முதல்வர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.சுவாமிநாதன். க.காளிதாசன் இணைந்து ஆக்கிய பல்லூடக இறுவட்டு வெளியிடப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வி.சித்திரவடிவேலும் இனிய விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணியும் கலந்து கொள் கின்றனர்.

(1-110)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி



கௌதாரிமுனை, பூநகரியை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி 23.05.2009 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சிவகுரு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சிவபாக்கியம்(இந்தியா), புவனேஸ்வரி, உலகநாதன் (G.S - சாவகச்சேரி), கமலாம்பிகை (ஆசிரியை -திருவையாறு ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராஜா (இந்தியா), சபாரட்ணம், இந்திராதேவி, இராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ராதா, டிலீசா, குமணன் (கனடா), சுயா, மூர்த்தி, குரு, ஹரீஸ், சசி, சலோ (லண்டன்), கேதா, பவான், ராஜன் (இந்தியா), சீலன், லோகன்,கிரி, அஜந்தன், அரவிந், பிருந்தா, கிருத்திகா, அஜீபன் ஆகி யோரின் அன்புப் போத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(25.05.2009) திங்கட்கிழமை வவுனியாவில்நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே. 077 8394024

தகவல்:
S.உலகநாதன் (G.S. - மகன்).

### திருமதி வினாசி செல்லம்



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் 21, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி வினாசி செல்லம் நேற்று முன்தினம் (23.05.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசியின் அன்பு மனைவியும் பாலசுந்தரம்(சுவிஸ்), திருமதி இந்திராதேவி (ஜேர்மனி),திருமதி ரஞ்சி னி (சுவிஸ்),திருமதி சந்திரா, திருமதி நிர்மலா (ஆசிரியை,யாழ்.மத்திய கல்லூரி), பாலமோகன்,காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமலர் (சுவிஸ்),சிவராசா(ஜேர்மனி),மரியதாஸ் (சுவிஸ்), தவரத்தினம், மோகனச்செல்வம் (தபாலகம்-சுன்னாகம்) ஆகியோ ரின் அன்பு மாமியும் துஜிதா, கெவின்(சுவிஸ்),கஸ்தூரி(சுவிஸ்), மீனுஜா(சுவிஸ்), வித்தகி,தோத்திரநாபன், காலஞ்சென்றவர்களான பிரதிபன்(லண்டன்), பிரசாந்த் ஆகியோரின் அன்புப் போத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2009) திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21,பொன்னப்பா வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். தொ.பே:- 0776041664,
0776080612,0602216317.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா முத்துக்குமாரு (J.P)

(முன்னாள் தலைவர், மணியம்பதி நிர்வாக சபை,
முன்னாள் முகாமையாளர், விவேகானந்த அச்சகம்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முத்துக்குமாரு நேற்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும் இரத்தினகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்), தினேஸ்குமார் (லண்டன்), அமரர் சதீஸ்குமார், விஜியகுமாரி (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியதர்சினி (ஜேர்மனி), தவப்பிரியா (லண்டன்), கேதீஸ்வரன் (கொமர்ஷல் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அட்சயன் (ஜேர்மனி), லஸ்சன் (லண்டன்), லகீசன் (லண்டன்), குகேசன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), யெகீஸ்சன் (மாணவன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரு வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காந்தி தேசமே! இது நீதியா?

வன்னியில் ஏற்பட்ட பேரழிவுக் கொடூரங்களினால் துடித்துப் போய்க் கலங்கி நிற்கின்றது தமிழினம்.

தங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற அவலம் ஒருபுறம். அநீதி இழைத்த தரப்புக்களைத் தட்டிக் கேட்க வக்கில்லாமல் மௌனித்திருக்கும் சர்வதேசம் குறித்து மறுபுறம் பெருவிசனம். வெஞ்சினம் மனதுக்குள் குமுறுகின்றது. துன்ப துயரங்களோடு அதனையும் சகித்துப் பார்த்திருப்பதைத் தவிர தமிழினத்துக்கு வேறு மார்க்கம் என்னதான் உண்டு?

ஆனாலும் விடுதலைப் புலிகளை அழிக்கும் யுத்தத்தின் பேரில் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டமையைப் பார்த்திருக்க மாட்டோம் என்றும் -

மக்களைக் கொன்றொழிக்கக் காரணமானோர் சர்வதேசச் சட்டங்களின் விசாரணைகளில் இருந்து தப்பிப் பிழைக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் -

ஒரு செய்தியை - ஆறுதல் தகவலை - இப்போது சர்வதேசம் கூற முற்படுவதாகத் தெரியவருகின்றது.

இலங்கை யுத்தத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து விசேடமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்று நாளை ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் விசேட கூட்டத்திற்கு வரவிருப்பதாகத் தெரிகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இந்த விடயத்தை மனித உரிமைகள் கவுன்ஸிலில் விசேட விவகாரமாக ஆராய்வதற்கான பிரேரணையாகக் கொண்டு வருவதற்குத் தேவைப்படும் மேலும் பதினாறு உறுப்பு நாடுகளின் ஆதரவை இதற்குப் பெற்றிருக்கின்றன என்று கூறப்படுகின்றது. ஆர்ஜென்ரீனா, பொஸ்னியா, கனடா, சிலி, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மெக்ஸிக்கோ, மொரிஸியஸ், நெதர்லாந்து, கொரியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, சுவிட்ஸர்லாந்து, உக்ரைன், உருகுவே போன்ற நாடுகளே அவை.

எனினும், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் மொத்தமாக அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் தனக்கு ஆதரவான தேசங்களை ஒன்று திரட்டி, இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பான விடயங்கள் கவுன்ஸிலின் முன் எடுக்கப்படுவதைத் தடுக்கும் தீவிர முயற்சியில் கொழும்பும் இறங்கியிருப்பதாகத் தகவல்.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, மலேஷியா, பஹ்ரைன், பிலிப்பைன்ஸ், கியூபா, சவூதி அரேபியா, எகிப்து, நிக்கராகுவா, பொலீவியா போன்ற தேசங்களே இலங்கைக்காக வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

எனினும், இவ்விடயத்தில் இலங்கைக்கு ஆதரவாக நிற்கும் நாடுகளை வழிக்குக் கொண்டு வருவதற்குத் தன்வசம் உள்ள ஆயுதம் ஒன்றை அமெரிக்கா கடைசி நேரத்தில் பயன்படுத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

வன்னிக் களத்தில் இறுதி நேர யுத்தம் எவ்வாறு கொடூரமாக - குரூரமாக - முன்னெடுக்கப்பட்டது என்பதைத் தனது செய்மதி உளவுத் தகவல்கள் மூலம் மிகத் துல்லியமாகவும், துலாம்பரமாகவும் அமெரிக்கா பதிவு செய்து வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. சர்வதேசப் போரியல் குற்றங்களாக அர்த்தப்படுத்தப்படக் கூடிய பல அம்சங்கள் ஆதாரத்தோடு தெளிவாக அவற்றில் அடங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கை விடயத்தைப் போரியல் குற்ற விசாரணைக்கு உட்படுத்தக் கூடாது என வாதிடும் தேசங்களுக்கு இந்த ஆதாரங்களின் ஒரு பகுதியைக் கடைசி நேரத்தில் அமெரிக்கா கசிய விட்டு விட்டு, இந்த விடயங்கள் குறித்தா விசாரிக்கக் கூடாது என வாதிடுகின்றீர்கள் என அமெரிக்கத் தரப்புக் கேள்வி எழுப்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைப் பிரச்சினையில் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்ய மறுத்து, அவர்களுக்கு எதிரான போரில் கொழும்புக்குத் துணை போனது பாரதம்.

இப்போது, அந்த யுத்தத்தில் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து நடைபெறக் கூடிய சர்வதேச விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, அதன்மூலம் ஈழத் தமிழர்களுக்கு சர்வதேசத்திடம் இருந்து கிடைக்கக்கூடிய நீதிக்கும் வேட்டு வைக்க முயல்கிறது அதே பாரதம்.

ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்த - இழைத்து வருகின்ற - இந்தியக் காங்கிரஸ் கட்சியின் அரசுக்கு முண்டு கொடுத்ததன் மூலம், ஈழத் தமிழர்களுக்கு முதுகில் குத்தும் கொடூரத்துக்குத் துணை போன தமிழக சக்திகளும், கட்சிகளும் இப்போது சர்வதேச விசாரணைகள் மூலம் ஈழத் தமிழருக்கு நீதி கிடைப்பதை முட்டுக் கட்டை போட்டுத் தடுக்கும் கொடுமையில் இந்தியா ஈடுபடும்போது என்ன செய்யப் போகின்றன?

ஈழத் தமிழர்களின் விடயத்தைப் பொறுத்தவரை பாரதம் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும். ஈழ யுத்தத்தில் கொழும்புக்கு நேரடியாகத் துணைபோய், அதன் மூலம் உபத்திரவம் செய்த இந்தியா, இப்போது ஈழத் தமிழர்களுக்கு இறுதியில் நீதி, நியாயம் செய்யக்கூடிய சர்வதேச நீதி மன்ற விசாரணைக்கும் தடைக்கல் போடுவதன் மூலம் தனது உபத்திரவத்தைத் தொடர முயல்கின்றது. காந்தி தேசமே! இது உனக்கே நீதியா?

# மூன்று ஆண்டுகளுக்கு முன் கூறியதை நிறைவேற்றியுள்ளார் ஜனாதிபதி

**24.05.2009 இல் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் அதன் அரசியல் விமர்சகர் எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகள்.**

தயவுசெய்து அவர்களிடம் கூறுங்கள் காலம், கடந்து கொண்டிருக்கிறது. நான் ஒரு பலவீனமான தலைவர் என நினைக்க வேண்டாம் நான் பொறுமை இழந்து கொண்டிருக்கிறேன் அவர்களின் சவால்களை என்னால் எதிர்கொள்ள முடியும். அதுவே அவர்களின் முடிவாகவும் இருக்கும்.

2006ஆம் ஆண்டு மே மாதம் இவ்வாறு ஜனாதிபதி ராஜபக்ஷ நோர்வே அமைச்சரும் அமைதித் தீர்வு முயற்சி அனுசரணையாளருமான எரிக்சொல்ஹெய்மி டம் கூறியிருந்தார்.

பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்காக சொல்ஹெய்ம் அப்போது இலங்கைக்கு வந்திருந்தார். பேச்சுக்கள் ஜெனீவாவில் நடைபெறுவதாக இருந்தன. புலிகளால் முடுக்கிவிடப்பட்டிருந்த வன்செயல் சம்பவங்களால் ராஜபக்ஷ மிகவும் கோபமுற்றவராக அப்போது இருந்தார்.

இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற்கொலை தாக்குதல் முயற்சி நடத்தப்பட்டிருந்தவேளை அவர் காயமுற்று சிங்கப்பூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

பேச்சுக்களுக்குத் திரும்பும்படியான நோர்வே அழைப்பையோ ஜனாதிபதியின் எச்சரிக்கையையோ புலிகள் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

வன்முறைகள் மேலும் அதிகரித்ததால் 2008 ஜனவரியில் ஒஸ்லோ அனுசரணையில் உருவான போர் நிறுத்த உடன்பாட்டை ராஜபக்ஷ இரத்துச் செய்தார். எனவே நான்காவது ஈழப்போர் மெதுவாக ஆரம்பமாயிற்று.

ராஜபக்ஷ சொல்ஹெயிமுக்கு அந்த வார்த்தைகளைக் கூறி சரியாக மூன்று ஆண்டுகள் ஆகும்வேளையில் அதனை நிறைவேற்றியிருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ராஜபக்ஷ பின்வரும் வகையில் பிரகடனம் செய்தார்:

''எமது தாய்நாடு பிரிவினை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுதிலிருந்து இலங்கையின் எந்த ஒரு அங்குலப் பகுதியிலும் நாடாளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களே அமுலில் இருக்கும்''.

**உணர்ச்சிகளை தூண்டிய செயல்**

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை ஜோர்தானிலிருந்து விமானத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி ராஜபக்ஷ, தமது இரு கைகளையும் கூப்பி தமது தாய்நாட்டுக்கு வணக்கம் செலுத்தினார். இது அங்கு கூடியிருந்தவர்களை மட்டுமன்றி தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தவர்களின் மனங்களையும் உணர்ச்சி வசப்படச் செய்தது.

அடுத்து நடந்த பன்மத நிகழ்ச்சியில் கொழும்பு பள்ளிவாசலைச் சேர்ந்த மௌலவி நியாஸ் இஸ்லாமிய தொழுகையை நிகழ்த்தியபோது அவராலும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. கவிதை மொழியில் அவர் தமது உணர்ச்சியை அழுகையுடன் வெளிப்படுத்தினார்.

அலரிமாளிகைக்குத் திரும்பியவுடன் ராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்துவிட்டதை அறிவிப்பதற்கான நடைமுறைகள் பற்றி சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஆலோசிக்கத் தொடங்கினார். நாடாளுமன்றத்திலிருந்து அறிவித்தலை நடத்துவது பொருத்தமாய் இருக்கும் என்று கருதப்பட்டது. சட்டப்படியான ஒருமுறையாக நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்குக்கொண்டு வந்து சம்பிரதாய முறையில் கூட்டத் தொடரை மீளவும் ஆரம்பித்து வைத்து கொள்கை அறிக்கையாக அறிவிப்பொன்றை செய்வதென்று முடிவுசெய்யப்பட்டது.

கடந்த வாரம் ஞாயிறு, திங்கள் நாள்களில் மிக முக்கியமான சம்பவங்கள் நடந்து முடிந்தன.

போர் ஓய்வுப் பகுதிகளில் எஞ்சியிருந்த நிலப்பரப்புக்களை கைப்பற்றும் நடவடிக்கைகளில் படையினர் இறங்கியிருந்தனர். இராணுவத்தின் 58 மற்றும் 59ஆவது பிரிவின் அணிகள் போர் ஓய்வுப் பகுதியின் கரையோரமாக மனித சுவர் ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

இதேவேளை போர்க்களத்துக்கு வெளியிலும் சில முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவே செய்தன.

**பத்மநாதன் விடுத்த அறிக்கை**

புலிகளின் சர்வதேச தொடர்புகளுக்குப் பொறுப்பான எஸ்.பத்மநாதன் கொழும்பிலுள்ள சில தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு, புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு உதவும் வகையில் ஐ.நா. அதிகாரிகளை வற்புறுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது. கொழும்பிலுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடனும் அவர் தொடர்புகொண்டதாகத் தெரிகிறது. அவர்களும் இந்தியாவில் தற்போதுள்ள தமது சகாக்களுடன் தொடர்புகொண்டு முக்கிய காங்கிரஸ் தலைவர்களை அணுகியுள்ளார்கள். இந்த நிலைமையில்தான் பத்மநாதன் வெளியிட்ட ஓர் அறிக்கையில் சரணடைவது தொடர்பான சில அம்சங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

'தமிழ் நெற்' இணையத்தளத்தில் வெளியாகியிருந்த அவரது அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

வன்னியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்றும்படியாக நாம் விடுத்த கோரிக்கைகளை உலகம் உதாசீனம் செய்துவிட்டது. இது இலங்கை இராணுவம் தனது நடவடிக்கைகளை கசப்பான முறையில் முடித்துக்கொள்வதற்கு ஊக்கமளிப்பதாகப் போய்விட்

# நடேசன், புலித்தேவன் கொலை எவ்வாறு இடம்பெற்றது?

டது. கடந்த 24 மணிநேரத்தில் 3 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள், மேலும் 2500 பேர் படுகாயமுற்றுள்ளார்கள்.

''எமது மக்களைப் பாதுகாப்பதுதான் இப்போதுள்ள தேவை. இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக எமது ஆயுதங்களுக்கு ஓய்வுகொடுக்க தீர்மானித்திருப்பதாக உலகத்துக்கு அறிவித்தோம்''

எமது மக்களை இரக்கமின்றி கொலை செய்யும் இலங்கை இராணுவத்தின் செயற்பாடு தொடர்கிறது. எமது கோரிக்கை செவிடன் காதில் விழுந்தது போல் கவனிக்கப்படாது போனமை எம்மை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

எமது மக்களையும் போராளிகளையும் உடனடியாகக் காப்பாற்றும்படி சர்வதேச சமூகத்தை நாம் மிக விரக்தி நிலையில் நின்று கேட்டுக் கொண்டோம். இந்தப் போரானது அதன் மிகக் கசப்பான நிலையை எட்டிவிட்டது. எல்லா இடையூறுகளுக்குமிடையில் இராணுவத்தை முன்னேறாமல் தடுத்து வந்திருக்கிறோம். இதற்கு எவர் உதவியும், அல்லது ஆதரவும் கிடைக்கவில்லை. எமது மக்களின் முடிவில்லாத ஆதரவு மட்டுமே கிடைத்து வந்தது.

எமது ஆயுதங்களை மௌனமாக்குவதற்கு நாம் முடிவு செய்துள்ளோம். எமது கவலையெல்லாம் இழந்து விட்ட உயிர்கள் குறித்தே. இனிமேலும் எம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. எமது அப்பாவி மக்களின் இரத்தம் இனிமேலும் சிந்தப்படுவதை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது...''

**இந்தக் கோரிக்கையின் நோக்கம் என்ன?**

இந்தக் கோரிக்கையின் நோக்கம் சிக்கிப்போயிருந்த தலைவர்களைக் காப்பாற்றுவதே. பொதுமக்களைக் காப்பாற்றுவதில் அக்கறை இருந்திருந்தால் ஆரம்பக் கட்டங்களிலேயே அவர்களை வெளியேற அனுமதித்து பெரும் எண்ணிக்கையானோரைக் காப்பாற்றியிருக்கலாம்.

இந்தக் கோரிக்கைக்கு எதுவித பதிலும் கிடைக்காமல் போனதையடுத்து இணையத்தளத்தில் அறிக்கை மறைந்து போயிற்று.

பின்னர் பத்மநாதன் வேறொரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். அதில் சிவில் அதிகாரிகள் பத்திரமாக வெளியேறுவதற்கான ஒரு சர்வதேச ஏற்பாட்டினை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, ஐரோப்பிய ராஜதந்திரிகள் மற்றும் ஓர் அரச ராஜதந்திரி முதலானோர் சேர்ந்து முன்னெடுக்கவிருந்ததை உயர்பாதுகாப்பு அதிகாரியொருவர் முறியடித்து விட்டார் என்று குற்றஞ்சாட்டியிருந்தார். அவர் தெரிவித்திருந்ததாவது:

எமது ஆயுதங்களை மௌனமாக்குவது என நாம் அறிவித்ததைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்தின் சில உறுப்பு நாடுகள் போருக்கு ஒழுங்கான ஒரு முடிவினைக் கொண்டுவரும் வகையில் இராணுவத்துடன் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக எமக்கு அறிவித்திருந்தன.

**ஆயுதமின்றி வெள்ளைக் கொடிகளுடன்**

இலங்கை இராணுவத்தின் 58 படையணியை ஆயுதங்கள் எதுவுமின்றி வெள்ளைக் கொடிகளுடன் சென்று அணுகும்படியாகக் கூறப்பட்டிருந்தது. அவ்வாறு எமது அரசியல் துணைத் தலைவர் பா.நடேசனும், புலித்தேவனும் சென்றனர். அவர்கள் ஆயுதமின்றி வெள்ளைக் கொடிகளுடன் சென்றனர். 58 படையணியினர் பேச்சுவார்த்தைக்கு வரும்படியாக முன்னே வரும்படி அழைத்தனர். அவர்கள் அவ்வாறு சென்றபோது இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். புலிகள் நல்லெண்ணத்தில் தம்வசம் வைத்திருந்த இராணுவக் கைதிகள் ஏழுபேரை அதற்கு முதல்நாள் விடுவித்திருந்த நிலையில் இவ்வாறு செய்யப்பட்டிருப்பதைக் கவனிக்கையில் மிக சகிக்கமுடியாத விடயமாகத் தோன்றுகின்றது''.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தகவல்கள் அவுஸ்திரேலிய வாரப் பத்திரிகையொன்றில் வெளியாகியுள்ளன. 'அப்பத்திரிகையின் அமந்தா ஹொட்கே என்று தற்போது கொழும்பிலிருக்கும் புதுடில்லி நிருபர் எழுதியுள்ள செய்தியின் சில பகுதிகள் வருமாறு:

**விஜய் நம்பியார் தெரிவித்த செய்தி**

ஐ.நா.வின் இலங்கைக்கான விஷேட தூதர் விஜய்நம்பியார் தமக்கு அந்த சரணடைதல் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தன. இரண்டு முக்கிய புலிகளின் உறுப்பினர்கள் சரணடைய விரும்பும் தகவலைத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தது என்று தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: இலங்கையின் வெளியுறவுச் செயலர் பாலிதகொஹன உட்பட இலங்கை அதிகாரிகளிடம் தகவலை கூறியிருந்தேன். ஆனால் அவர்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கப்படுவார்களா என்பதற்கு உறுதிய ளிக்கப்படவில்லை. சிலர் சரணடைய விரும்புவது தொடர்பான செய்தியைக் கூறும்படி கேட்டிருந்தபடி நான் செய்தேன்.

இலங்கை அதிகாரிகள் ''காலம் சென்றுவிட்டது என்றாலும் பார்ப்போம்'' என்று கூறினார்கள். யுத்தத்தின் இறுதி நாள்களில் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் நடேசனும் சமாதானச் செயலக தலைவர் புலித்தேவனும் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ராஜ தந்திரிகளைத் தொடர்புகொண்டு பல தடவைகள் தாம் தமது குடும்பங்களுடன் சரணடைவது பற்றி பேச்சு நடத்த விரும்புவதாகத் தெரிவித்திருந் துள்ளார்கள். கடந்த ஞாயிறு இரவு அல்லது திங்கள் அதிகாலையில் இராணுவத்தின் 58ஆவது படையணியை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள் என்றும் அந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்றும் தெரிகின்றது.

**இராணுவம் மறுத்துள்ளது**

புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் பத்மநாதன் விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக இலங்கை இராணுவம் கோபமுற்றுள்ளது. புலிப்போராளிகளின் குழுவொன்று சரணடையப் போவதாக 58 ஆவது படையணி ஒருபோதும் அறிந்திருக்கவில்லை என்று உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முன்னரங்கப் பகுதியில் படையணிகள் நிலைகொண்டிருந்த இடத்தை நோக்கி நடேசனும் புலித்தேவனும் ஆயுதம் தரித்த குழுவொன்றுடன் தாக்குதல் நடத்த வந்த போது படையினர் தாக்கினார்கள். இந்த இருவரையும் சேர்த்து 70 போராளிகள் கொல்லப்பட்டனர் என்றார் அந்த அதிகாரி. (ப)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 12 | 26.05.2009<br>செவ்வாய்க்கிழமை |
| திதி: | துதியை<br>பி.ப. 02.17 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம்<br>பி.ப. 04.41 வரை |
| சுபநேரம்: | 10.22 - 11.52 |
| ராகுகாலம்: | 02.52 - 04.22 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கு வெளிநாடுகளில் 'துயரதினம்' அனுஷ்டிப்பு

கொழும்பு, மே, 25

வன்னியில் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்து சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், டென்மார்க், பெல்ஜியம், சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் கடந்த வெள்ளிக்கிழமை துயரதினம் கடைப்பிடித்தனர்.


ஜேர்மனியில்

பிரான்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் துயரத்தின் நிகழ்வு நடைபெற்றது.

பிரான்ஸ் தமிழ் கலை பண்பாட்டுக்குழு கலைஞர்களால் பாடல்கள் பாடப்பட்டன. அத்துடன் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

படுகொலை செய்யப்பட்ட தாயக உறவுகளை நினைத்துக் கலங்கிய கண்களோடு மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். அத்துடன் சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.

### ஜேர்மனியின் நகரங்களில்

ஜேர்மனியில் உள்ள டுசில்டோவ், பேர்லின் ஆகிய நகரங்களில் கடந்த வெள்ளிக்கிழமை காலை துயர நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

பிராங்போட் நகரில் ஒன்றுகூடிய தமிழ் மக்கள், கறுப்பு ஆடையும் கறுப்புப் பட்டியும் அணிந்து பேரணியாக பிராங்போட் நகரில் அமைந்திருக்கும் அமெரிக்கத் துணைத் தூதரகத்தை நோக்கி அமைதி யாகச் சென்றனர்.

பேரணியாகச் சென்ற மக்கள் ஆயிரக் கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் முகாம்க ளில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு கோரி அமெரிக்கத் தூதரகத்திடம் மனு கையளித்தனர்.

டுசில்டோவ் நாடாளுமன்றத்தின் முன்பாக உண்ணாநிலை நடைபெறும் திடலில் ஒன்றுகூடிய தமிழ் மக்கள் கறுப்பு ஆடையும் கறுப்புப் பட்டியும் அணிந்திருந்தனர். அத்துடன் சமாதானத்தைக் குறிக்கும் குறிவடிவில் நின்று கைகளில் மெழுகுவர்த்திகளை ஏந்தி துயர நாளைக் கடைப்பிடித்தனர்.

### நோர்வேயில்

அதேவேளை நோர்வேயின் பேர்கன் நகரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற துயர நாள் நிகழ்வில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

நகரின் முக்கிய பகுதிகள் ஊடாக கறுப்பு ஆடை அணிந்த தமிழ் மக்கள் தமது கைகளில் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

நிகழ்வில் கலந்து கொள்ள வந்தவர்களிடம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களை ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தி ஐ.நாவுக்கு அனுப்புவதற்கு கையெழுத்துக்களும் பெறப்பட்டன.

நோர்வேயின் மோல்டே நகரிலும் துயர தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டு வன்னியில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களையும் நினைவுகளைச் சுமந்து தீபச்சுடர் ஏற்றி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

### சுவிஸ் சூரிச் நகரில்

இதேசமயம் வன்னியில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவு கூரும் வணக்க நிகழ்வு சுவிஸ் சூரிச் மாநகரில் உள்ள ஹெல்விற்றியா பிளற்சில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெற்றது.

அகவணக்கத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான சுவிஸ் வாழ் தமிழர்கள் கலந்துகொண்டு கரங்களில் மலர்களையும், மெழுகுவர்த்திகளையும் ஏந்திய வண்ணம் உணர்வுபூர்வமாக படுகொலை செய்யப்பட்ட தமது தாயக உறவுகளுக்கு வணக்கத்தைச் செலுத்தினர்.


சுவிஸில்

சுவிஸ் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணர் தலைமையேற்றார்.

பேரவையின் ஆலோசகர் வன்னித்தம்பி தங்கரத்தினம் ஈகச்சுடர் ஏற்றினார். செல்வி நுதாயினி தர்மலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

### டென்மார்க்கில்

இதேசமயம் டென்மார்க் தலைநகரில் நடத்தப்பட்ட போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

இதில் 7 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டு தமது உரிமைக்குரல்களை எழுப்பினர்.

போராட்டத்தில் டெனிஸ் குடிமக்களும் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் டெனிஸ் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் முக்கியத் துவம் குறித்த தமது கருத்துக் களை டெனிஸ் மக்களுக் குத் தெரியப் படுத்தினர்.

தமிழர் அமைப் புக்களாலும் தமிழர் மாணவர் அமைப்புக்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டமானது டென்மார்க்கில் நடைபெற்ற முதலாவது நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

நிகழ்வில் டேசியா வாழ் தமிழ் மாணவர்கள் சமகால வன்னித் தமிழர்களின் அவல வாழ்க்கையை சித்தரித்துக் காட்டும் நிகழ்வை இசை வடிவத்தில் போராட்டம் நடத்தப்பட்ட இடத்தில் வெளிப்படுத்தினர்.


நோர்வேயில்

### நெதர்லாந்து நாடாளுமன்றம் முன்பாக

அதேசமயம் நெதர்லாந்து நாடாளுமன்றம் முன்பாக தமிழ் மக்களால் கடந்த வெள்ளிக்கிழமை துயரதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.

இதில் பெருந்திரளான மக்கள் கறுப்பு உடை அணிந்தும் கறுப்புக் கொடிகளுடனும் மெழுகுவர்த்திகளுடனும் பூக்களுடனும் கலந்துகொண்டனர்.

அகவணக்கத்துடன் தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் சில காட்சிப் படங்கள் வைக்கப்பட்டு மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டும் மலர்வணக்கமும் அனைவராலும் செய்யப்பட்டது.

அதேநேரம், நெதர்லாந்து நாடாளுமன்றம் முன்பாக 48 ஆவது நாளாகத் தொடரும் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் இடம்பெற்றதோடு அன்றைய தினமும் துயர தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### சுவீடன் தலைநகரில்

இதேவேளை படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு சுவீடன் தலைநகரின் மக்கள் கூடும் பிரதான இடமான செகல்தொர்ய் எனும் இடத்தில் மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள் பெரும் சோகத்துடன் மெழுகுவர்த்திகள் கைகளில் ஏந்தி படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆன்மா சாந்தியடையவும், அவர்களின் கனவை நனவாக்க உழைப்போம் எனும் உறுதியுடனும் தமது இதயத்து வணக்கத்தைச் செலுத்தினர்.

இந்நிகழ்வில் பலர் கறுப்பு ஆடைகள், கறுப்புக் கொடிகளுடன் தமது துயரத்தை வெளிப்படுத்தினர்.

சுவீடனில் இயங்கும் குருதிஸ்தான் அமைப்பில் இருந்தும் பலர் வந்து எமது துயரத்தில் கலந்துகொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வன்னிப் படுகொலைகளை பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதுடன் அங்குள்ள தமிழ் மக்களால் கறுப்பு நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தொடங்கியது.

நிகழ்வின் முதலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதையடுத்து படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றுகூடிய அனைத்து மக்களும் கறுப்பு உடை கள் அணிந்திருந்தனர்.

### பிரிட்டிஷ் நாடாளுமன்ற முன்றலில்

வன்னியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை அந்த உறவுகளுக்காய் இறுதிவரை போராடி மரணித்த உணர்வான தமது போராளிகள் என அனைவரையும் மனதிலே தாங்கி அந்த இழப்புகளை தாங்கமுடியாது விம்மி வெடித்து விழிநீரை வடித்தவண்ணம் நாடாளுமன்ற சதுக்கத்தை நிறைத்து கறுத்தக்கொடி விரித்ததுபோல புல்வெளி முழுதும் தமிழ் மக்கள் வணக்கம் செய்ய நிறைந்தனர். சரியாக 6மணிக்கு அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகின. மக்கள் வெள்ளம்போல் வந்து அலை அலையாக தமது வணக்கத்தை செலுத்த வந்திருந்தனர். என்றும் காணாதவகையில் இந்த வணக்க நிகழ்விற்கு இளையோர்களே அதிகம் கலந்து கொண்டனர்.

வணக்க பீடத்தில் பொதுமக்களுக்கு ஓர் கல்லறையும் போராளிகளுக்கு துப்பாக்கி ஒன்று நிலத்தில் தலைகீழாக வைக்கப்பட்டு நடுவே தமிழீழம் சுட்டிகளில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு தாயகத் தீ அணையாது என அர்த்தப்படுத்தப்பட்டது.

நள்ளிரவையும் தாண்டி மக்கள் தமது வணக்கத்தை உணர்வுடனும் உருக்கமாகவும் செய்து கொண்டிருக்க வரலாற்றில் முதல் முறையாக பிரிட்டஷ் நாடாளுமன்ற சதுக்கத்தை சுற்றிவர மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு எங்கள் வேதனைகளையும் எமது உறுதியையும் காட்டுவது போல இருந்தது.


பிரிட்டனில்

### மலேசியாவில்...

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என வலியுறுத்தி மலேஷியாவில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

கோலாலம்பூரிலுள்ள மிகப் பிரபல்யமான பட்டு குகை இந்து கோவிலுக்கு முன்பாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலேஷியத் தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

100 நாள்களுக்குள் 25 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து, அவர்கள் இதற்கு பதிலளிக்க வேண்டும் - நீதி வழங்க்கப்படவேண்டும் எனக் கோரினர்.

மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்படும் பிரேரணைகளுக்கு மலேஷிய அரசு ஆதரவளிக்கக்கூடாது என அவர்கள் கோரினர்.

---

## மரண அறிவித்தல்

### முத்தையா அப்பையா



கோப்பாய் மத்தி, முத்துமாரியம்மன் வீதியை (தோற்ப்பிட்டி) வசிப்பிடமாகக் கொண்ட முத்தையா அப்பையா அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் பூலோகராசா, ஞானசோதி, லோகேஸ்வரி, கேதீஸ்வரி, இராஜவேந்தன், மகேந்திரராசா, தங்கலிங்கம் (அமரர்), விஜயசோதி ஆகியோரின் தந்தையும் றஜனி, துரைராசா, சின்னராசா செல்வச்சந்திரன், சுபாங்கி, தசாயினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்துமாரியம்மன் வீதி,*
*கோப்பாய் மத்தி.*

தகவல்:
குடும்பத்தினர்.

---


## வீடு வாடகைக்குத் தேவை

அரச பணிபுரியும் குடும்பத்திற்கு யாழ் நகரை அண்டிய K.K.S வீதி, பிறவுண் வீதி, நாவலர் வீதியில் ஆகக் குறைந்தது மூன்று அறைகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0778 [illegible]548


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் புவிதின விழிப்புணர்வுக் கண்காட்சி கோண்டாவில் கருணை இல்லத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
நல்லூர் பிரதேச செயலக பதில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பிரதேச செயலகத் திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரசர்மா அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பொருள்கள் பார்வையிடப்படுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

## நலன்புரி நிலைய மாணவருக்கு சுய கற்றல் கையேடுகள்

யாழ்ப்பாணம், மே 25

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் உள்ள பாடசாலைகளில் கற்கும் தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான கணிதபாட சுயகற்றல் கையேடுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வலய கணிதவள நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட சுயகற்றல் கையேடுகள் மாணவர்களுக்கு வீநியோகிக்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (203-207)

## 'நிஷா'வால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், மே 25

தென்மராட்சி பிரதேசத்தில் 'நிஷா' புயலின்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 'போரூட்' நிறுவனத்தினரால் உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதுவரை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களாக அரிசி, மா, ரவை, அங்கர் பால்மா, கடலை, பயறு, மரக்கறி எண்ணெய், மிளகாய் ஆகிய பொருள்களே விநியோகிக்கப்பட்டன.

மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் மூன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (203-207)




## காரைநகர் ப.நோ.கூ.சங்க கோப்சிற்றி திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 25

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மினி கோப்சிற்றி திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காரைநகர் களபூமியில் கோப்சிற்றி திறப்பு விழா சங்கத் தலைவர் கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கோப்சிற்றியைத் திறந்து வைப்பார். (203-224)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 6 ஆயிரம் 'எக்ஸ்ரே' பிலிம்ஸ்

### கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது

யாழ்ப்பாணம், மே25

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து 6 ஆயிரம் எக்ஸ்ரே பிலிம்ஸ்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த எக்ஸ்ரே பிலிம்ஸ்களுடன் ஒரு தொகுதி மருந்து வகைகளும் இக்கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

தற்போது அதிகளவிலான எக்ஸ்ரே பிலிம்ஸ்கள் வந்து சேர்ந்திருப்பதால் வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கான தேவையை மூன்று மாதங்களுக்கு நிறைவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் வைத்தியசாலை வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கும் தேவை ஏற்படும் பட்சத்தில் எக்ஸ்ரே படப்பிடிப்பு மேற்கொள்வது சம்பந்தமாக அறியப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (203- 224)

## ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய திருத்த வேலைக்கு நிதியுதவி

நவாலி, மே 25

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் மேல்மாடி திருத்த வேலைகளுக்கென 2லட்சத்து 22 ஆயிரம் ரூபா நிதியை மாகாண அமைச்சு வழங்கியுள்ளது.

திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக பாடசாலை அதிபர் ந. சிவகடாட்சம் தெரிவித்துள்ளார். (203-100)

# குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இன்னும் நீங்கியபாடில்லை

### உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 25

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களான கோதுமை மா, சீனி போன்றவற்றுக்கு நிலவும் தட்டுப்பாடு இன்னும் நீங்கவில்லை. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அன்றாடப் பயன்பாட்டுக்குத் தேவையான கோதுமை மா , சீனி போன்றனவற்றுக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தட்டுப்பாட்டை நீக்க உரிய அதிகாரிகள் முன் வரவேண்டும் என்று மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களில் இந்தப் பொருள்களின் கையிருப்பு தீர்ந்துள்ளமையே இந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டிகின்றது.

எனினும் ஒரு சில ப.நோ.கூ.சங்கங்கள் கையிருப்பில் உள்ள மேற்படி பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகம் செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை-தனியார் வர்த்தக நிலையங்களில் இவற்றின் விலைகள் மேலும் அதிகரித்துச் செல்வதாக மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பொருள்களுக்கான விலை அதிகரிப்பும் அவற்றுக்கான தட்டுப்பாடும் தொடர்ந்தவாறே இருப்பதாகவும் உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை இன்னும் ஏன் எடுக்கவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இப்பொருள்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இவற்றின் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை-குடாநாட்டில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் விநியோகம் செய்யப்படும் கோதுமை மா பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாகவும் அதிகவிலை கொடுத்துப் பெற்றும் அதனை உணவுக்காகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-224)

# நலன்புரி முகாம்கள் மூடப்பட்ட போதும் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை

### சுகாதாரப் பணிகள் பூர்த்தியடையாமையே காரணமாம்

யாழ்ப்பாணம், மே25

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.ஆகியவற்றில் இயங்கிய நலன்புரி நிலையங்கள் கடந்தவாரம் மூடப்பட்ட போதிலும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் இன்னும் பூர்த்தியடையாததால் இவற்றினை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவித்தனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களால் பாவிக்கப்பட்ட மலகூடக் குழிகளிலிருந்து கழிவுகள் வெளியேறுவதாலும், இதுவரை அவற்றினை அகற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையாலும் கல்விச் செயற்பாடுகளை பாடசாலை நிர்வாகங்கள் ஆரம்பிக்காமல் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.

உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர் கேட்டுள்ளனர். (50-207)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ முகாம்; தமிழ்பேசும் டாக்டர்களை அழைக்கிறார் டக்ளஸ்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க தமிழ்பேசும் மருத்துவர்களை முன்வந்து உதவுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனைத்து நலன்புரி நிலையங்களுக்குமான மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சுழற்சி முறையில் மருத்துவர்கள் குழு பணியாற்றச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பணியில் இணைந்துகொள்ளும் மருத்துவர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தையும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்து தருவதற்கும் முடிவு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி பேசக்கூடிய மருத்துவர்களைக் கொண்டு மருத்துவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் இம்முயற்சிக்கு மருத்துவர்கள் மனிதாபிமான அடிப்படையில் முன்வரவேண்டும்.

எமது மக்கள் தற்போது எதிர்கொண்டிருக்கும் உணவு, உடை மற்றும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை அவர்களின் மருத்துவத் தேவைகளைப் பொறுத்தவரையில் அதற்கு விஷேட ஏற்பாடுகள் அவசியம்.


எனவே இம்மாபெரும் மனிதநேயப் பணியில் அனைவரும் உணர்வோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்ற இணைந்து கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார் - என்றுள்ளது. (203)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவின் திறப்புவிழா நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய முகாமை[illegible] பூங்காவை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாவிட்டபுரம், வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். சப்பறத்தில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவதை முதலாவது படத்திலும் மறுநாள் இடம்பெற்ற தேர்த் திருவிழாவின்போது சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் எழுந்தருளி வீதியுலா வருவதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

## வைத்தியர்கள் மூவரும் அமைச்சின் விசாரணையில்

கொழும்பு, மே 25

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் இயங்கிய தற்காலிக வைத்தியசாலையில் பணியாற்றிய மூன்று டாக்டர்களையும் சுகாதார அமைச்சு விசாரித்து வருகிறது.

அமைச்சின் பேச்சாளர் தர்ம வன்னி நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றிய இந்த மருத்துவர்களான டி.சத்திய மூர்த்தி, டி.வரதராஜா, வி.சண்முகராஜா ஆகிய மூவரும் அந்தப் பகுதியில் காயமடைந்த பொதுமக்கள் தொடர்பாக பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கினார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் முழுமையாகத் தோற்கடிக்கப்படுவதற்கு முன்னதாக இவர்கள் மூவரும் யுத்த பிரதேசத்திலிருந்து தப்பி வந்தபோது, இவர்களை இராணுவம் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-1)

## கூடைப்பந்தாட்ட அணி திருமலை பயணம்

வலி.வடக்கு, மே 25

வடமாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகள் நாளை செவ்வாய்க்கிழமை கப்பல் மூலம் திருகோணமலைக்கு பயணமாகவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள்,பெண்கள் என 24 பேர் இந்த அணியில் இடம் பெற்றுள்ளார்கள். இவர்களுடன் கோப்பாய்,தெல்லிப்பளை, பிரதேச செயலகங்களில் விளையாட்டு அலுவலர்களான இ.அனுரகாந்தன் கு.முகுந்தன் ஆகியோரும் செல்லவுள்ளார்கள்.

திருகோணமலையில் வடமாகாண மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிகள் தேசிய மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெறுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(09 - 186)

## நல்லூர் பிரதேச சமாசம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 25

நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து சமாசம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துள்ளன.

கடந்த 15ஆம் திகதி இடம் பெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் இந்த அங்குரார்ப்பணம் இடம்பெற்றது.

(203)

**Personal Class**

தரம் 6 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

[அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை, தொடர்புகளுக்கு முந்தவும்.]

தொடர்பு: ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

T.P.:077 8716113

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426 (302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

(85568)

# மாணவர்கள் பாடவிதானத்துக்கு அப்பால் பொது அறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## பொது அறிவு நூல்களைப் படிப்பது இதற்கு அவசியம்

வடமராட்சி, மே 25

பாடசாலை மாணவர்கள் பாடவிதானத்திற்கு அப்பால் பொது அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு நூலகங்களில் உள்ள பல்வேறு நூல்களையும் வாசிக்க வேண்டும்.

நூல்களை வாசிப்பதற்கும், பொது அறிவை வளர்த்துக்கொள்வதற்கும் மாணவர்கள் தமக்குள் வாசிப்பை வளர்த்தெடுக்க வேண்டும்.

இவ்வாறு இளைப்பாறிய யாழ். செயலக தலைமையக உதவி அரசாங்க அதிபர் வீ.வீரபத்திரபிள்ளை பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூல்நிலையத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

உலக புத்தக தினம், நூலக வாரத்தை ஒட்டி நடத்தப்பட்ட இக்கண்காட்சி பருத்தித்துறை பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் பெ.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வீ.வீரபத்திரபிள்ளை மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் உள்ளூராட்சி மன்றங்கள்தோறும் பொது நூலகங்கள் உருவாக்கப்பட்டு மக்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க பல அரிய பொக்கிஷ நூல்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. மக்களின் வாசிப்புப் பழக்கத்தை குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படையச் செய்யும் நோக்கிலேயே இத்தகைய நூலகவாரம், புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நூல் நிலையத்தில் நிறைய நூல்கள் இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி மாணவர்கள் வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் நூலகப் பயன்பாட்டினை அடைய முடியும். நூல்களைத் தேடிப் படிப்பதன் மூலம் புதிய புதிய தகவல்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது ஆசிரியர்கள் மத்தியிலும் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது. அவர்களும் புதிய புதிய நூல்களைப் படித்து அவற்றை மாணவர்களுக்குத் தெரிவித்து, அவ்வாறான நல்ல புத்தகங்களை வாசிக்குமாறு மாணவர்களைத் தூண்ட வேண்டும் - என்றார்.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. வசீகரன் உரையாற்றுகையில்:

நானும் தனது குடும்பத்தினரும் இந் நூலகத்தைப் பயன்படுத்தியே முன்னுக்கு வந்தோம். நான் மாணவனாக இருந்த காலத்தில் கிராமக் கோட்டடியில் இந் நூலகம் செயல்பட்டபோது அதன் பயன்களைப் பெற்றேன். தொடர்ந்தும் நூலகம் இப்புதிய இடத்திற்கு வந்தபோதும் இதைப் பயன்படுத்தி எனது அறிவு, ஆற்றல்களைப் பெருக்கிக்கொண்டேன்.

மாணவர்களின் செயல்திட்டங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்கக்கூடிய இடம் நூலகம்தான்.

மாணவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் தமது செயல்திட்டங்களை நிறைவேற்ற அல்லது ஆய்வுகளுக்கான தகவல்களைச் சேகரிக்க உகந்த ஒரே ஒரு இடம் நூலகம் தான்.

எனவே நூலகத்தில் உள்ள நூல்களை நாம் தேடித் தேடி எடுத்துப் படிப்பதுடன் எமது அறிவு, ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

பிரதம முகாமைத்துவ உதவியாளர் பெ. பூபாலசிங்கம் தனது தலைமையுரையில்:

எமது நூலகத்தில் நிறைய பல்துறை சார்ந்த மாணவர்களுக்கான நூல்கள் பல உண்டு. அவற்றை மாணவர்களும் ஏனையோரும் உரிய விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நூலகசேவையை திறம்பட வழங்குவதற்கு பருத்தித்துறை பிரதேச சபை எந்நேரமும் தயாராக இருக்கிறது - எனக் கூறினார்.

பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கண்காட்சியில் கலந்துகொண்டனர். (203-236)




ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் வவுனியாவிலுள்ள 'மனிக் பாம்' நலன்புரி நிலையத்திற்கு விஜயம் செய்தபோது அவரை மாணவி ஒருவர் வரவேற்பதையும், நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள ஒரு குடும்பத்தினரையும் படங்களில் காணலாம்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி காத்தலிங்கம் கௌரி அவர்களது பாசமிகு தந்தையார்

**வைரமுத்து காத்தலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி. (சி/558706) நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

**வலி கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் செயற்படவுள்ள பால் உணவுப்பொருள் உற்பத்தி விற்பனை நிலையத்தில் கடமைபுரிவதற்கு உதவியாளர் தேவை (ஒப்பந்த அடிப்படையில்). G.C.E சித்தியடைந்தவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். அச்சுவேலி - ஆவரங்கால் பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

பசுப்பால் லீற்றர் 40 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படும். பால் உற்பத்தி, பசுமாடு வளர்ப்புக்கு இலங்கை வங்கி ஊடாக கடன் வசதி (A.L.D.L) ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்

பிரதான வீதி, கோப்பாய்.

021 2263403, 077 6103230 (சி/558707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தன்னம்பிக்கையும், அதிபர், ஆசிரியர்களின் அரவணைப்புமே ஆக்கத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெறக் காரணம்

## - தங்கப்பதக்கம் வென்ற நிதுஷா

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு-I இல் ஆக்கத்திறன் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்ற, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி நிதுஷா குகனேசனின் அனுபவப் பகிர்வு இங்கு பிரசுரமாகிறது.

*கேள்வி: தமிழ்மொழித் தினப்போட்டியில் நீங்கள் பங்கேற்ற நிகழ்ச்சி எது?*

*பதில்:* நான் பிரிவு 1 ஆக்கத்திறன் நிகழ்ச்சியில் அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டியில் பங்கேற்றேன்.



கோட்டமட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம் என்று படிப்படியாக முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிக்குத் தெரிவாகினேன்.

*கேள்வி: தேசிய மட்டப் போட்டி தொடர்பான உங்களின் அனுபவங்களைப் பகிர முடியுமா?*

*பதில்:* யாழ்ப்பாணத்தில் இருந்து தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்பதற்காக கப்பல் மூலம் பயணித்து திருகோணமலையை அடைந்தேன். அதன் பின் கொழும்பு சென்றேன். அங்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில்,போட்டிகளில் பங்கேற்க வந்த ஏனைய மாணவர்களுடன் நானும் தங்க வைக்கப்பட்டேன்.

அடுத்த நாள் காலை அதாவது 21.03.2007 அன்று போட்டி நிகழுகின்ற பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரிக்குச் சென்று ஆக்கத்திறன் போட்டியிலேயே பங்கேற்றேன்.

*கேள்வி: பொதுவாகத் தேசிய மட்டத்திலான போட்டிகளில் பங்கேற்கும் போது பயம்,பதற்றம் என்பன வெல்லாம் ஏற்படுவதுண்டு. இவை உங்களுக்கு ஏற்படவில்லையா?*

*பதில்:* அப்படியான நிலை ஒரு போதும் என்னை அணுகவில்லை. இத்தகைய திடமான மனோநிலையை நான் அடைவதற்கு என்னுடைய பாடசாலை அதிபரான இ. ராகவன் அவர்களும், ஆசிரியையான ஆனந்தநாயகி அவர்களும் தான் காரணம் என்று சொல்லலாம். ஏனெனில் இவர்கள் இருவரும் தந்த தன்னம்பிக்கைதான், மனதை ஒரு நிலைப்படுத்தி எனக்குள் இருந்த பயம், பதற்றம் என்ப வற்றை அகலச் செய்தது. இதனால் போட்டியில் முழு மனதோடு பங்குபற்றி வெற்றிக்கனியை நான் எட்டிப் பறிக்க முடிந்தது.

*கேள்வி: போட்டியின் போதும், அதன் பின்னருமான உங்கள் செயற்பாடுகளை விளக்க முடியுமா?*

*பதில்:* ஆக்கத்திறன் போட்டியிலே எனக்கு 'ரயில் பாதையும் அதன் கடவையும்' என்னும் தலைப்புத் தரப்பட்டிருந்தது. இதனை ஒத்த கருத்துடைய பயிற்சியினை பாடசாலையில் எனது ஆசிரியை ஏற்கனவே தந்திருந்ததனால் வெகு எளிதாக இத்தலைப்பின் கீழ் ஆக்கத்திறனைச் செய்து முடித்தேன்.

போட்டி நடைபெற்ற அன்று மாலையே மண்டப விளம்பரப்பலகையில் வெற்றியீட்டியோரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அதில் நான் முதல் பரிசினை வென்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற நானும்,எனது தாயாரும் (சாந்தமலர் குகனேசன்) பெருமகிழ்வடைந்தோம். எனது கனவு நனவாகி விட்டதை எண்ணி ஆனந்தம் கொண்டேன்.

உடனேயே தொலைபேசி மூலம் எனது பாடசாலை அதிபருக்கு என்னுடைய வெற்றிச் செய்தியைத் தெரியப்படுத்தினேன்.

*கேள்வி: போட்டியில் வெற்றியீட்டியும் இன்னும் உங்களுக்கும், இந்த ஆண்டு வெற்றிபெற்ற ஏனைய மாணவர் களுக்கும் பரிசுகள் வழங்கப்படவில்லை என்று தெரிகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?*

*பதில்:* மாணவர்களுக்கு பரிசுகள், பதக்கங்கள் என்பன, அவர்கள் தொடர்ந்து முயற்சிப்பதற்கான ஊக்கிக ளாக அமைகின்றன. பேட்டியில் வெற்றியீட்டியதும் எனக்குரிய பதக்கம் உடனேயே வழங்கப்பட்டு விடுமென்றே எண்ணினேன். ஆயினும் என் எண்ணத்திற்கு எதிர்மாறாக எனக்கும், இம்முறை போட்டிகளில் வெற்றி யீட்டிய ஏனைய மாணவர்களுக்கும் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இதுவரை நடத்தப்படவே இல்லை. இதை நினைக்கையில் சற்றுக் கவலையா கவே உள்ளது. உரிய அதிகாரிகள் எமது மனக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் செயற்பட்டு, வெகு விரைவில் எமக் குரிய பதக்கங்களை அணிவிக்க வழி வகை செய்வார்களென நம்புகிறேன்.

நேர்காணல்: வல்லழகனார்.




தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரக் கன்றுகள் நாட்டும் நிகழ்வு சித்திரைப்புத்தாண்டு தினத்தில் இடம்பெற்றது. விவசாய போதனாசிரியர் செ.துரைராசா மரக்கன்றினை நாடுவதையும், அருகில் சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார், இயக்குநர்சபை உறுப்பினர் வி.ஆறுமுகம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: தென்னவன்)

# ராசி பலன்

25-05-2009 முதல்
31-05-2009 வரை
பொ.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்பபு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். உடல் நலமுண்டு. பகை விலகும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றாம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்கள் தொல்லை தருவர். மன அமைதி இருக்காது.




**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை தூர விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைநடுக்கமும் தள்ளாட்டமும் நரம்பு மண்டல நோயின் அறிகுறி




**கேள்வி:** எனது தந்தையார் வயது 64. அவருக்கு நீரிழிவு நோய் உள்ளது. கொஞ்சக்காலமாக உடலில் நடுக்கம் உள்ளது. விரல்கள் நடுங்குகின்றன. அவரால் கைகளை உபயோகித்து வேட்டி உடுக்கவோ-சட்டைக்குப் பொத்தான்கள் பூட்டவோ முடியாமல் கைகள் நடுங்குகின்றன. சாப்பிடுவதும் குறைவு. பலவீனமாக உள்ளார். நடக்கும் போது யாரோ பின்னாலிருந்து தள்ளுவது போல் தள்ளாடி நடக்கின்றார். அவருக்கு என்ன நோய் ஏற்பட்டுள்ளது. பரிகாரம் தருக.

**பதில்:** உங்கள் தரவுகளை வைத்து அனுமானிக்கும் போது - உங்கள் தந்தையாருக்கு Parkinsonism என்ற நரம்பு மண்டல கோளாறு ஏற்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றேன். மூளையில் உள்ள Dopamine (டோப்பமைன்) என்ற ஹோர்மோன் குறைவினால்தான் இந்தக் கோளாறு ஏற்படுகிறது. விரல்களும், கைகளும் ஓய்வாக இருக்கும் போது கூட நடுங்குவது, மெதுவான தள்ளாடும் நடை (Shuffling of Feet) - உடல் Stiff ஆக விறைப்பாக இருப்பது போன்றன இந்தக் கோளாறின் குணங்களாகும். இதற்கு டோப்மைன் வகை மருந்துகளை - வைத்தியர்கள் கொடுப்பார்கள். கொஞ்சக் காலத்துக்கு இந்த மருந்துகள் திறமையாக வேலை செய்தாலும், பின்னர் இந்த மருந்துகளால் ஏற்படும் பின்விளைவுகள், பக்கவிளைவுகள் தொந்தரவு தருபவை. 'பார்க்கின் சோனிஸ' கோளாறால் ஏற்படும் உடல் அசைவுகள் மேலும் அதிகரித்தல், நோயாளியின் இயல்புகளில் விபரீதமான மாற்றங்கள், மருந்துகளின் செயற்பாடுகள் குறைதல் என்பவை இந்த பிறவிளைவுகளில் சிலவாகும். இப்படியான விளைவுகள் ஏற்பட 5-7 வருடங்கள் எடுக்கும். இந்த Parkinsonism கோளாறு Degenerative Diseases என்கின்ற கலங்களின்



தொழிற்பாடுகள் செயல் இழப்பதால் ஏற்படுகிறது. எவ்வளவு மருந்து செய்தாலும் நோயின் தாக்கம் மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே போகும். இருந்தும் இந்த நோய்க்கு குணமாக்க மருந்து ஒன்றும் கண்டறியப்படவில்லை. எதற்கும் உங்கள் தந்தையின் வாழ்க்கை சுமுகமாகச் செல்வதற்கு - நரம்பியல் நிபுணரின் ஆலோசனை பெறவும்.

***

**கேள்வி:** எனது மகன் வயது மூன்றரை மாதம் அவரது கண்களிலிருந்து தொடர்ந்து கண்ணீர் வடிக்கின்றது. டாக்டர்களிடம் காட்டினால் கண் சொட்டு மருந்து தருகின்றார்கள். உபயோகித்தும் எதுவித பலனும் கிட்டவில்லை. எனது மகனின் பிரச்சினை என்ன?

**பதில்:** கண்களில் எப்பொழுதும் கண்ணீர் சுரந்து கொண்டிருக்கும். கண்கள் வரண்டுபோகாமல் இருக்க இந்த கண்ணீர் சுரப்பு உதவுகிறது. சுரக்கும் இந்த கண்ணீர் - கண்களுக்கு மூக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு துவாரம் வழியாக வெளியேறுகிறது. துவாரம், வெளியேறும் பாதை யாவும் சேர்ந்து Nasolacrimalduct என்றழைக்கப்படுகின்றது. சில குழந்தைகளுக்கு இந்த கண்ணீர் வெளியேறும் குழாய் பிறவிக்குறைபாடாக மூடியே இருக்கும். இதனால் குழந்தையின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டேயிருக்கும். குழந்தைக்கு ஒரு வயதாகும் போது இந்த அடைப்பு நீங்கிவிடும். சிலகுழந்தைகளுக்கு கண்ணீருடன் பீளையும் சாறும். இதற்கு கண்பூச்சு மருந்து போட்டு இந்த குழாய் பகுதியை விரல்களால் அழுத்திவிடவேண்டும் - (Massage). இப்படிச் செய்வதால் திடீரென்று இந்த குழாய் திறக்கலாம். ஒரு வருடத்துக்கு பின்னரும் இந்த பிரச்சினை தொடருமானால் இந்த குழாய் வழியை - சிறுவர் கண் நிபுணரைக் கொண்டு - துப்புரவாக்கி சிகிச்சை செய்ய நேரிடும்.

***

**கேள்வி:** ஆண் வயது 44. எனது பாதங்கள் இரண்டிலும் பித்த வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. பலவிதமான பூச்சுமருந்துகள் பூசியும் பலனில்லை. எந்த நேரமும் பாதங்கள் வெப்பமாக இருக்கின்றன. தண்ணீரில் நனைத்து வைத்துக்கொண்டிருந்தால் சுகமாக இருக்கிறது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** இது பொதுவாக பாதங்களில் ஏற்படும் பிரச்சினை. ஆங்கில வைத்தியத் தின் படி பாதத்தின் சருமம் காய்வதால் இப்படி தோல் வெடிக் கின்றது. இதனை Xerosis என்று அழைப்பர். இதற்கு அடுத்ததாக - குதிக்காலின் விளிம்புகள் - [illegible] அல்லது (Callus) இந்த வெடிப்புகள் இலகுவாக குணமடையாமல் போகின்றன. அநேகமானவர்களுக்கு இது தொல்லைதருவதாகவும், பாதங்களின் அழகை கெடுப்பதாகவும் அமைகின்றன. ஆனால் சிலருக்கு இழந்த வெடிப்புகள் ஆழமாகச் சென்று, நடப்பதற்கு நிற்பதற்கு வேதனை தருகின்றன. சிலவேளைகளில் பற்றீரியா தொற்று ஏற்பட்டு வேதனை, காய்ச்சல், வீக்கம் கூட ஏற்படலாம். சில மனிதர்களுக்கு இயற்கையாகவே சருமம் வரண்டிருக்கும். இவர்களுக்கு பித்த வெடிப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம். குதிக்கால் சருமம் தடிப்பாக உள்ளவர்கள் அந்தப்பகுதியில் அழுத்தம் அதிகமாக ஏற்படுகிற வகையில் - நடப்பதால் பித்தவெடிப்பு குதிக்காலில் ஏற்படும். மேலும் நீண்ட நேரம் நின்று வேலை செய்பவர்களுக்கு முக்கியமாக - கடின தரையில் நின்று வேலை செய்பவர்கள், எடை அதிகமாக உள்ளவர்கள் (எடை குதியில் தாக்கம் கொடுத்து - குதியின் தடித்த தோலை விரியச்செய்யும்), குதிப்பக்கம் திறந்திருக்கும் பாதணிகளை அதிகமாக உபயோகிப்பவர்கள்

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உற்ற பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(இவர்களது குதி சருமம் பக்கவாட்டமாக விரிந்து, பித்த வெடிப்புகளுக்கு காரணமாகும்), மற்றும் உலர்ந்த சருமத்துக்குக் காரணமாக உள்ள நீரழிவு, தைரொயிட் சுரப்பு, மற்றும் Eczema, Psoriasis சரும நோயுள்ளவர்கள் ஆகியோருக்கு பித்த வெடிப்புகள் ஏற்படும். முதலில் இந்த கோளாற்றுக்குரிய சிகிச்சைக்கு, பித்த வெடிப்புக்கான காரணங்கள் அறியப்பட்டு அதற்குரிய சிகிச்சைகள், மாற்றங்கள் செய்யப்படவேண்டும். குதி திறந்த பாதணிகள், அல்லது தடிப்பம் குன்றந்த (Thin Soled) - பாதணிகள் அணிவது தவிர்க்கப்படவேண்டும். தடித்த பாதசருமத்தை, வெடிப்புகளின் விளிம்புகளை, சவரபிளேட் அல்லது கத்தரிக்கோல் கொண்டு வெட்டி அகற்றுவதை நீங்களாகவே செய்ய முயலக்கூடாது. இதனால் காயங்கள் பெரிதாகி பக்டீரியாத் தொற்று ஏற்பட்டு [illegible]ப்படநேரிடும். முக்கியமாக நீரிழிவு நோய்க்காரர்கள் இந்த செயலை கட்டாயம் தவிர்க்க வேண்டும். Pumice கல் எனப்படும் உராய்வு கல் கொண்டு - சருமத்தை தேய்த்து காய்ந்த சருமத்தை - நீக்கி தோலை மிருதுவாக்கலாம். இதை கிரமமாக செய்துவந்தால் பித்தவெடிப்புக் காயங்கள் விரைவில் குணமாகும். இத்துடன் பாதத்தில் நீர்த்தன்மை ஏற்படுத்தும் Moisturizing Cream - தினமும் இருவேளை உபயோகித்து வர - பாதத்தின் சருமம் மிருதுவாகி, உராய்வு கல் கொண்டு மேலதிக தடிப்பத்தை நீக்குவது எளிதாகும் . பித்த வெடிப்புகள் மிகவும் வலியை, வேதனையைத் தந்தால் - வெடிப்புகளை இறுக்கிக் கட்டி - காயங்கள் காய உதவலாம் (Strapping The Feet to Hold Cracks Together) உங்கள் நடையில் உள்ள மாற்றங்கள் காரணமாக தோல் தடிப்பமானால், In Soles என்கின்ற பாதணிகளுள் செருகும் பட்டைகளை - விசேடமாக தயாரித்து பாதணிகளுடன் உபயோகப்படுத்த வேண்டும். இதுபோல் குதிக்கால் தடிப்பத்துக்கு - Neel Cap உபயோகிக்கப்படுத்தவேண்டும். சில நகர மருத்துவ நிலையங்களில் இப்படிப்பட்ட கோளாறுகளுக்கு Podiatrist என அழைக்கப்படும் விசேட நிபுணர்கள் இருப்பார்கள். அவர்களின் ஆலோசனை பெறுதலும் விரும்பத்தக்கது.

***

**கேள்வி:** வயது 42 ஆண். கடந்த 4 ஆண்டுகளாக எனது கால் விரல்களுக்கிடையில் சதா அவிந்து புண்கள் ஏற்படுகின்றன. ஆங்கில ஹோமியோபதி மருந்துகள் செய்தும் பலனில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** Tinea Pedis என்கின்ற பங்கசு (Fungus) தொற்று உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த பங்கசு (பூஞ்சணவகை) Spores எனப்படும் அதன் துகள்களால் - பொதுவான குளியலறை, நீச்சல் குளம், உடுப்பு மாற்றும் அறைகள் என்பவற்றை உபயோகிக்கும் போது மற்றவர்களுக்குத் தொற்றுகிறது. இந்த Spores நீண்ட காலம் அழியாமல் இந்த இடங்களில் உயிர் வாழக்கூடியது. இப்படியான இடங்களில் வெறுங்காலுடன் நடமாடுவதும், துவட்டும் துணிகள், துவாய்களை பகிர்ந்து கொள்வதும் இலகுவாக தொற்று ஏற்பட ஏதுவாகின்றது.

ஒரு சிலருக்கு இந்த பங்கசு தொற்று அடிக்கடி ஏற்படுவது பொதுவாக காணப்படுகின்றது. இதற்கு இவர்கள் அடிக்கடி பங்கசு Spores உள்ள இடங்களில் நடமாடுவது, அல்லது இவர்களின் உடலில் கொழுப்பு அமிலங்கள் உருவாகுவது குறைவாகக் காணப்படுவது, அல்லது காற்றுப்புகாத இறுக்கமான பாதணிகளை உபயோகிப்பது, அல்லது வியர்வை அதிகமாக இருப்பது, ஒரே பாதணி அல்லது காலுறையை நீண்டகாலம் உபயோகிப்பது, என்பவை காரணங்களாகக் காணப்பட்டுள்ளன. மேற்கூறிய காரணங்கள் முதலில் கவனிக்கப்படவேண்டும்.

பங்கசு கொல்லிகள் - Clotrimazole, Miconazole, Flucanazole, போன்றவை தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு எடுக்கப்பட வேண்டும். சரியான பாதுகாப்பு முறைகளை கைக்கொள்வதாலும், சரியான முறையில் சரியான மருந்துகளை உபயோகிப்பதாலும் - உங்கள் பிரச்சினைக்கு நிச்சயம் முடிவு காணமுடியும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அகதிகள் கதி என்ன?

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள இன்றைய நிலையில் இன்று எமக்குப் பெரும் சவால்கள் காத்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதி முகாம்களில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஈழத்தமிழர் அடைக்கப்பட்டுள்ளனர்




என்று சில புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதே போல இந்தியாவுக்கு வெளியே வெவ்வேறு நாடுகளில் பல லட்சம் ஈழத்தமிழர் அகதிகளாக வாழ்கிறார்கள். வெளிநாட்டில் அகதிகளாக வாழும் தமிழர்களின் நிலை கொஞ்சமாவது கண்ணியத்துடன் இருப்பதாக அம்மக்களின் எழுத்துக்களின் மூலம் அறியமுடிகிறது. அதே சமயம் தன் தொப்புள் கொடி உறவென நம்பிக்கையோடு தமிழகத்துக்குள் வந்தவர்கள் அடைபட்டுக்கிடக்கும் முகாம்களின் நிலைமை படுமோசம்.

காலையிலும், மாலையிலும் கையெழுத்திட்டு தமது இருப்பை உறுதி செய்துகொள்ளும் நிபந்தனை. பிணையில் வெளியே வந்த குற்றவாளிகள் போல, அகதி முகாமில் இருப்பவர்கள் வேலை காரணமாகவோ, படிப்பின் காரணமாகவோ வெளியில் சென்றால் கூட மாலைக்குள் திரும்பி விட வேண்டும். ஒரு நாள் இரவு கூட வெளியே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

போதிய கழிப்பிட வசதியோ, மின்சார வசதியோ இல்லாமல் அம்மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருவது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? வெளியிலிருந்து முகாமுக்குள் எடுத்துச் செல்லப்படும் எல்லா உடமைகளும் கடுமையான சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றன, அது காய்கறி பழம் வாங்கிய பையாக இருந்தாலும்.

புதிதாக வரும் அகதிகளிடம் சோப்பு, செண்ட், பொலியஸ்டர்



துணி வகைகள், கடிகாரம் போன்றவற்றை அபகரிக்கவோ அல்லது விலை குறைத்து வாங்கிக் கொள்ளவோ தமிழக மக்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் அம்மக்களின் வாழ்கை நிலை மேம்பட அவர்கள் என்ன செய்து விட்டார்கள்?

இலங்கையிலிருந்து அகதியாக வந்த ஓர் இளைஞர் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்து வரும் பிரபலமான ஓர் அரசியல் கட்சித் தலைவரின் நிறுவனமொன்றில் வேலை கேட்டு விண்ணப்பிக்க, புலியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த இளைஞருக்கு வேலை மறுக்கப்பட்டது.

புலிகளை முற்றாக அழித்து விட்டோம் என ராஜபக்ஷ அரசு சொல்லியிருக்கிறது. இதுதான் சமயமென ஒரு வேளை தமிழகத்திலிருக்கும் அகதிகள் திருப்பி அனுப்பப்படலாம். ஆனால், அகதியாக நாடிழந்தவன் தன் சொந்த நாட்டுக்கு திரும்பிப் போக விரும்புகிறானா, இல்லையா என்பதை அறிந்தே அனுப்ப வேண்டும். அதை விடவும் அப்படித் திரும்பிப் போகும் அகதிகள் சுதந்திரமாய் உயிர் வாழக் கூடிய சூழ்நிலை அங்கே நிலவுகிறதா என்பதை ஆய்வு செய்த பின்னரே அனுப்ப வேண்டும் என சர்வதேச சமூகம் சொல்கிறது.

சரி, இந்தக் கருத்து கனடா, ஜேர்மனி போன்ற மற்ற மற்ற நாடுகளுக்குச் சரி. அவைகள் இலங்கையில் நடக்கும் பேரழிவு பற்றித் தெரிந்திருக்கின்றன. ஆனால், இந்தியாவின் நிலை என்ன? புத்தரின் கருணை வெள்ளம் இலங்கையின் இண்டு இடுக்குகளில் எல்லாம் வழிந்து ஓடுவதாகவும், ராஜபக்ஷ என்பவர் ஒரு மஞ்சளாடை அணியாத புத்த பிக்கு எனவும் நம்பும் அல்லது நம்புவதாகச் சொல்லிக் கொள்ளும் மதியூக மந்திரிகளும், வெளியுறவுத் துறை செயலாளர்களும், நடு நிலை நாளேடுகளின் அதிபர்களும் அல்லவா இங்கே வெளியுறவுக் கொள்கையை முடிவு செய்கிறவர்களாக இருக்கிறார்கள்? அவர்கள் நாளையே, அகதி முகாம்கள் என்ற பெயரில் இங்கே இயங்கிக் கொண்டிருக்கும் மாறுபட்ட சிறை வடிவத்தில் அடைந்து கிடக்கும், கேட்க நாதியில்லாத மக்களை தேனாறும் பாலாறும் பாய்ந்தோடி வளம் கொழிக்கும் அவர்களின் அன்னை பூமிக்கு திரும்பிச் செல்லுங்கள் என்று நிர்பந்திக்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?

அப்படி ஒரு நிலைமை வந்தால் அன்று மட்டும் என்ன செய்து கிழித்துவிடப் போகிறோம் நாம்? எமது தலைவர்கள்தான் என்ன செய்து விடப் போகிறார்கள்? அவர்களுக்கு அடுத்த தேர்தல் கூத்துக்கு இன்னமும் இரண்டு வருட அவகாசம் இருக்கிறது. அப்படியே நாளையே தேர்தல் என்ற நிலை வந்தாலும் கூட இரண்டு வேளை உணவுக்கு இடைப் பட்ட நேரத்து உண்ணா நிலை போதும், அனுதாபத்தை அள்ளவும், இப்பிரச்சினையில் [illegible] அனுதாபத்தைக் காட்டவும். அதற்கும் மேல் சேர்த்து வைத்திருக்கும் செல்வத்திலிருந்து ஒரு சில துணுக்குகளை வாரியிறைத்தால் போதும், உத்திரவாதமாக எமது மக்கள் பொத்தான்களை அழுத்தி வாங்கிய காசுக்குத் தமது விசுவாசத்தை நிரூபித்து விடுவார்கள்.

சரி, இதை எல்லாம் தடுக்க என்னதான் நாம் செய்ய முடியும்? முதலில் அகதி முகாம் என்று அழைக்கப்படும் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் மக்களின் நிலை இன்று என்னவாக இருக்கிறது? அதற்கு காரணமாகச் சொல்லப்படுவது என்ன? அவர்கள் விரும்பிய முறையில் வெளியில் சென்று வேலை பார்க்கவோ, படிக்கவோ முடிவதில்லை. தட்டுத்தடுமாறி படித்து முடிப்பவர்களுக்கும் கூட அரசு வேலை வாய்ப்புக்கள் கனவிலும் சாத்தியமில்லை. ஏகப்பட்ட கண்காணிப்புக்கு உள்ளாகியிருக்கும் இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் துணிச்சல் தனியார் நிறுவனங்களுக்கு மட்டும் வந்துவிடவா போகிறது? வெளியிலிருக்கும் மக்கள் விரும்பினாலும் கூட அவர்களால் முகாமில் இருப்பவர்களுக்கு பொருளாதார உதவிகளையோ, வேலை வாய்ப்புக்கான உதவிகளையோ தடையின்றி செய்ய முடிவதில்லை. இத்தனை கட்டுப்



பாடுகளுக்கும் இன்றுவரை சொல்லப் படும் ஒரே காரணம் இவர்களை சுதந்திரமாகவிட்டால் புலிகளுக்கு உதவி விடுவார்கள் என்ற நைந்து புளித்துப் போன ஒற்றைப் பதில்தான்.

இன்று எம் முன்னால் இருக்கும் மிகப் பெரிய கடமை ஈழப் போராட்டத்தை இனி யார் தொடர்வார்கள் என்ற கவலை இல்லை. ஏனெனில் அதில் நாம் உருப்படியாக எதுவும் செய்துவிட முடியப்போவதில்லை என்பது நிச்சயம். தந்திரமாய் இந்திய அரசும் இலங்கை அரசும் செய்யும் பிரசாரத்தை முறியடிக்க அவர்களின் ஆதாரங்களில் உள்ள ஓட்டைகளைக் கண்டுபிடித்து பட்டியலிடுவதை விட்டுவிட்டு, நாமும் அவர்களின் வழியிலேயே போய் எம்மிடம் உள்ள பிரச்சினைகளுக்கு ஏதேனும் தீர்வு காண முடியுமா என முயலுவதே ஆக்க பூர்வமான முயற்சியாக இருக்கும். சரி, பிரபாகரன் இறந்து விட்டார். புலிகளின் கடைசி அத்தியாயம் முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் நாமும் ஒப்புக் கொள்வோம். இப்போது இங்குள்ள (தமிழ்நாடு) அகதி முகாம்களில் இருப்பவர்களின் மீதான கெடுபிடியை தளர்த்தலாம் இல்லையா? அவர்களையும் பயங்கரவாதிகளைப் போல அச்சத்தோடு பார்க்க வேண்டிய தேவை என்ன? பங்களாதேஷ் சுதந்திரமடைந்த உடன் அங்கிருந்து வந்த அகதிகளையெல்லாம் திருப்பியா அனுப்பி விட்டோம்? அவர்களுக்கு கூப்பன் அட்டை உட்பட எல்லாவற்றையும் கொடுத்து எமது சமூகத்துக்குள்ளேயே ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட வில்லையா? அதே நியாயம் இனி ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும் தானே? இனி வெறும் புலிப் பூச்சாண்டி காட்ட முடியாதே? புலிகளைத்தான் ஒழித்து விட்டார்களாமே சிங்கள இராணுவத்தினர்? அப்புறமும் என்ன இவர்களைப் பற்றிய பயம்?

எனவே இனியேனும் முகாம்களில் அடைந்து கிடக்கும் அந்த அப்பாவிகளுக்கு கொஞ்சமேனும் சுதந்திரக் காற்றை அனுப்பி வைக்க முயற்சிப்போம். நன்கொடை என்ற நாகரிகப் பிச்சைக்கு பதில் அவர்களின் கல்விக்கும் வேலை வாய்ப்புக்குமான ஏற்பாடுகளை நம்மாலான அளவில் செய்து கொடுப்போம்.

★ அகதிகளாக வந்து இங்கே வாடும் சொந்த சகோதரர்களுக்கு ஒரு விழுக்காடேனும் அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை தர அரசு முன் வர வேண்டும்.

★ அகதிகள் முகாம் என்ற ஒற்றைக் கட்டுமானத்துக்குள்தான் வாழ வேண்டும் என்று நிர்பந்திக்காமல், நாட்டின் எப்பகுதியிலும் வாழ அனுமதிக்கப் பட வேண்டும்.

★ பாஸ்போர்ட், விசா போன்ற தகுந்த ஆதாரங்க்ளில்லாமல் கள்ளத் தோணிகளில் வந்து சேர்ந்த இவர்களுக்கு, முதல் கட்ட விசாரணையின் பின் கூப்பன் அட்டை போன்ற முறையான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்.

★ சொந்தத் தொழில் செய்ய நினைப்போருக்கு வங்கிகள் கடன் தர முன் வர வேண்டும்.

★ அங்கே விவசாயம் மட்டுமே செய்து வந்தவர்களுக்கு இங்கேயும் விவசாயத்துக்கு நிலம் ஒதுக்கப்பட வேண்டும்.


இலங்கையில் தவிக்கும் தமிழர்கள் துயர்துடைக்க 500 கோடி இந்திய ரூபாயை அள்ளித்தரப் போகிறதாம் இந்திய அரசாங்கம். அதுவும் யார் கையில்? எந்த அரசு தன் சொந்த நாட்டு மக்களின் மேல் கொத்து குண்டுகளை வீசியதோ அதே அரசின் கைகளில். சரி, போகட்டும். அதையெல்லாம் தடுக்கும் சக்தி எம்மில் யாருக்கும் இல்லை.

இங்கே எமது நாட்டுக்குள்ளே தவிக்கும் இந்த அப்பாவி மக்களுக்காக அதில் பத்தில் ஒரு பகுதித் தொகையை ஒதுக்கி[illegible] மேலே சொன்ன நலத் திட்டப் பணிகளை விடவும் கூடுதலாகவே எல்லாம் நடந்துவிடும். சொந்த தேசத்தை விட்டு வெளியேறி வரும் முன் அந்த மக்கள் வாழ்ந்த பொருளாதார நிலையை இங்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்க முயல வேண்டும். அப்போதுதான் என்றாவது அவர்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பும் போது, விட்டு வந்த வாழ்கையை தொடர்வதற்கு ஏதுவாக இருக்கும். இல்லையெனில் அங்கு போன பின்னும் பூஜ்யத்திலிருந்து வாழ்கையை கட்டமைக்க வேண்டிய அவலத்திற்கு இம்மக்கள் ஆளாக நேரிடும்.

அதே போல இன்னமும் இலங்கையிலேயே மாட்டிக் கொண்டிருக்கும் மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளும் சரியான முறையில் நடக்க வேண்டும். எனவே இனியேனும், செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும், மற்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களும் நேரடியாக அம்மக்களுக்கு உதவ அனுமதிக்கப் பட வேண்டுமென்ற கோரிக்கையை உரக்கச் சொல்ல வேண்டும்.

மீண்டும் மீண்டும் பிரபாகரன் உயிரோடிருப்பதாக நிரூபிப்பதில் நாம் செலவழிக்கும் ஆற்றலை ஆக்க பூர்வமாக இது போன்ற விஷயங்களில் செலவழித்தால் அம்மக்களுக்கு ஏதேனும் நிவாரணம் கிடைக்கக் கூடும். எல்லோரும் போராட்டம் ஓய்ந்து விட்டது என்று சொல்லிவிடுவதால் ஒரு போதும் சுதந்திர உணர்வு இல்லாமல் போய் விடப் போவதில்லை. காலம் வரும்போது சுதந்திரப் போர் மீண்டும் வரட்டும். இப்போது பசியில் சாகிறவனுக்கு உணவும், கொஞ்சம் கவுரவமான வாழ்வும் தர முயற்சிப்போம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய இளைஞர்களுக்கான விருது வழங்கல் 2009 போட்டியில் இளைஞர்கள் சிலை வடிவமைப்புப் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை முதலாவது படத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சிலைகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

## பசுக்கன்றை இரையாக்கிய கட்டாக்காலி நாய்கள்

யாழ்ப்பாணம், மே 25

கட்டாக்காலி நாய்களின் இரைக்கு பசுக் கன்று ஒன்று பலியான சம்பவம் நேற்று முன்தினம் முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்று திடீரென கன்று ஒன்றை ஈன்றது.

அப்போது அங்கு நின்ற கட்டாக்காலி நாய்கள் இந்தக் கன்றை இரையாக்கியுள்ளன.

(203-224)

## விசேட தேவையுடையோரை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

நவாலி, மே 25

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள விசேட தேவைக்குரியோர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-100)

## கணிதபாட சுயகற்றல் உபகரணம் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 25

மாணவர்களின் கணிதபாட அடைவை மேம்படுத்தும் நோக்குடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கணித மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகத்தால் தயாரிக்கப்பட்ட கணிதபாட சுயகற்றல் உபகரணங்களின் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் ஆசிரியர் வே.சண்முகலிங்கத்தால் ஆக்கப்பட்ட இடைநிலை மாணவர்களுக்கான இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் லயன் வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.வி.மகேந்திரன், ஈ.எஸ். பேரம்பலம் நிறுவன முகாமையாளர் எஸ்.நாகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(1)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1089 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் 23 37 42 52

22-05-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,713,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 178,301 | 20/- | 3,566,020/- |
| 2 இலக்கங்கள் | 16,405 | 40/- | 656,200/- |
| 1 இல. + லக்கினம் | 16,302 | 60/- | 978,120/- |
| 2 இல. + லக்கினம் | 1,474 | 200/- | 294,800/- |
| 3 இலக்கங்கள் | 438 | 1000/- | 438,000/- |
| 3 இல. + லக்கினம் | 36 | 10,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,713,050/- | - |
| மொத்தம் | | | 6,693,140/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 212,963 | | 7,193,140/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,508,550/-

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பதுளை | 500166370-2-40 |
| கொழும்பு | 500168678-7-06 |
| மட்டக்களப்பு | 500167573-9-23 |
| கண்டி | 500172022-6-16 |
| மாத்தறை | 500163407-4-26 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, 37/1A, சிவன் அம்மன் வீதியில் சகலவசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த.சோமசுந்தரம், 16/4, விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர், சுண்டுக்குளி. தொ.பே. இலக்கங்கள். 021-222 5787, 021 4590067, 077 1120314. (பி.ப.2.00 மணிக்குப் பின் பார்வையிடலாம்). (85522)

## நோய் தீர்க்கும் யோகாசனங்கள்

இந்நூல் வெளிவந்து விற்பனையாகிறது.
ஆசிரியர் : ஆ.பொ.மு.ஏரம்பமூர்த்தி
விலை ரூபா 250/-
இல.412, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
"அனைத்து புத்தகசாலைகளிலும் கிடைக்கும்"


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் சின்னத்தம்பி சுந்தரம்

தோற்றம் 11-07-1929

மறைவு 25-04-2009

கடந்த (25.04.2009) சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், எமது துயரத்தினைப் பகிர்ந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (25.05.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு, மிருசுவில். (85447) மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### முருகுப்பிள்ளை தெய்வேந்திரன்

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை தெய்வேந்திரன் 18.05.2009 அன்று லண்டனில் காலமானார். அன்னார் கலைவாணியின் (கலா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - அழகம்மா (நந்தாவில்) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற காந்தரத்தினம் - சிவகாமசுந்தரி (வட்டுக் கோட்டை) தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி, சண்முகரட்ணம் புவனராணி, குமரேந்திரன், கலாராணி, சர்வேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சச்சிதானந்தன், சிவமலர், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் கமலினி, ராஜகருணா, பவானி, சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செந்தில் சிவகாந்தன், ராஜகௌரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2009) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி கலைவாணி (கலா), 0208 - 6465772 லண்டன்.
இந்திராணி சச்சிதானந்தன் (சகோதரி) 011- 4942311 கொழும்பு.
(சி/558656)

## மீசாலை வடக்கில் வீதி சேதம்

யாழ்ப்பாணம், மே 25

மீசாலை வடக்கு வேம்பிராய் சந்தியிலிருந்து வரணிக்குச் செல்லும் வீதியில் சுமார் இரண்டு மீற்றர் தூரம் நீண்ட காலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் மந்துவில் மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய பகுதி மக்களும் விவசாயிகளும் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதி திருத்தப்படாததால் இவ்வீதியூடாக நடத்தப்பட்ட பருத்தித்துறை - சாவகச்சேரி பேருந்துச் சேவை கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(203-207)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!
நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும்

யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக் களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கிலாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர், நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமலர் பூக்கள்
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வேலணை பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப் போட்டியில் வீரர்கள் கலந்து கொள்வதை முதலாவது படத்திலும் பரிசுபெற்ற வீரர் ஒருவருக்கு மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் வெற்றிக் கேடயம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வீ.அருளானந்தம் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:லக்ஸ்மன்)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் முடிவுகள் சில

வலி.வடக்கு, மே 25

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் 22.05.2009 உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று பிரசுரமாகிறது.

19 வயதுப் பிரிவு:

*100 மீற்றர் ஓட்டம்* - சு.பகீரதி (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை), ஸ்.ஆன்சுபாங்கினி (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), யூட் விஜிதா (ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி).

200 மீற்றர் - சு.பகீரதி (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), ஸ்.ஆன்சுபாங்கினி (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), ம.தயாளினி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

400 மீற்றர் ஓட்டம் - பா.சிந்துஜா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), இ.துஷ்யந்தினி (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), ஸ்ரீபுவிதா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

800 மீற்றர் ஓட்டம் - இ.காவேரி (அளவெட்டி அருணோத யாக் கல்லூரி), க.ஆரோக்கியறோபினியா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை), சீ.செல்வரஜனி (தென்மராட்சி கச்சாய் அ.த.க பாடசாலை).

1500 மீற்றர் ஓட்டம் - இ.காவேரி (அளவெட்டி அருணோத யாக் கல்லூரி), சீ.செல்வரஜனி (தென்மராட்சி கச்சாய் அ.த.க பாடசாலை), ஸ்ரீநிரோ ஜன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

5000 மீற்றர் ஓட்டம் - இ.காவேரி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சீ.செல்வரஜனி (தென்மராட்சி கச்சாய் அ.த.க பாடசாலை), ஸ்ரீ.நிரோஜனா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

110 மீற்றர் தடை தாண்டல் - ம.தயாளினி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஆ.நிலானி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), பி.அலொஸ் ஆஷா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை).

400 மீற்றர் தடை தாண்டல் - நா.ஜனனி (அளவெட்டி அருணோத யாக் கல்லூரி), எ.ஆன்பெனாசிர் (யாழ்.திருக் குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), சி.சுகர்னியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

நீளம் பாய்தல் - ந.மதனிகா (மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்), சு.பகீரதி (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை), ச.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

உயரம் பாய்தல் - ச.தனுசா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), கு.துஷ்யந்தினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.மொரின் ரூபினா (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை).

முப்பாய்ச்சல் - ச.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல் லூரி), வ.தர்மினி (சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), பி.அலெக்ஸ் ஆஷா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை).

குண்டு போடுதல் - ஜெ.ஜருசா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), த.ரஜிதா (வேலணை மத்திய கல்லூரி), அ.கோபிக் கிருஷ்ணா (யாழ்ப்பாணக்கல்லூரி).

தட்டெறிதல் - ச.யசோதரா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி), இ.பிரசாந்தி (அராலி சரஸ்வதி வித்தியாலயம்), ச.மேகலா (வரணி மகா வித்தியாலயம்).

ஈட்டி எறிதல் - ம.றிசானா (உடுவில் மகளிர் கல்லூரி), ச.யசோதரா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி), உ.உதயரூபினி (இமையாணன் அ.த.க பாடசாலை).

கோலூன்றிப் பாய்தல் - ச.தனுசா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ம.வேணுரங்கா (கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தி), வி.சர்மிலா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை).

4 X100 மீற்றர் அஞ்சலோட்டம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), (இளவாலை கன்னி யர் மடம் பாடசாலை).

4 X400 மீற்றர் அஞ்சலோட்டம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்பாடசாலை).

(வளரும்) (04-86)

# 17 வயதுப் பிரிவு பாடசாலை கிரிக்கெட் 8 விக்கெட்டுக்களால் யாழ்.இந்து வெற்றி

வலி.வடக்கு, மே 25

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 08 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி 18 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. கவிராஜ் 35 ஓட்டங்களையும் சசிகரன் 15 ஓட்டங்களையும், சஜீவன் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சார்பில் நிலோஜனன் 05 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 1.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் ஒரு ஓட்டத்திற்கு 02 விக்கெட்டுக்களையும், கிருசோபன், சிலேந்திரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

108 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 14.4 ஓவர்களிலேயே 02 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பார்த்தீபன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் செந்தூரன், டிலக்ஷன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் சார்பில் டிலக்ஷன் 02 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், கவிராஜ் 1.4 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(04-86)

# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வெற்றி!

வலி.வடக்கு, மே 25

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 66 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரியும், யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சீராளன் 41 ஓட்டங்களையும் பிரசோபனன் 28 ஓட்டங்களையும் கஜேந்திரா 25 ஓட்டங்களையும் பென்சமின் நிருபன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பிரியலக்சன் 15 ஓட்டங்களையும் ஸ்ரீகுகன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 15 ஓட்டங்கள் பெறப்பட்டன.

உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் சார்பில் உசானந் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவருடன் 47 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் குகெயன் 6.5 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும்,

வசிதரன் நிரஞ்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி 28.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

உசானந் 23 ஓட்டங்களையும், கௌரீசன் 22 ஓட்டங்களையும், கோபிராஜ் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 27 ஓட்டங்கள் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் மென்டில்கரன் 06 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பிரியலக்சன் 7.4 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும்,

டிலக்சன் 02 ஓவர்கள் பந்து வீசி 08 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கஜேந்திரன் 04 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கிரிசாந் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்





யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அணியினரை முதலாவது படத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை [illegible] டாவது படத்திலும் காணலாம். வெற்றிவாகை சூடிய அணியினருடன் குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் [illegible] படுகின்றனர்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் இருந்து வந்து, வவுனியா 'மனிக் பாம்' நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களையும், வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களையும் ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# ஏ - 9 பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி; பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் திறப்பு!

## அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே.25

யாழ்.கண்டி ஏ9 வீதியை பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பீ.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். அமைச்சர் பீ.பீ.ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஏ-9 நெடுஞ்சாலை புனரமைக்கப்பட்டு விட்டது. தற்போது இராணுவ வாகனங்களும் உணவு பொருள்களை கொண்டு செல்லும் லொறிகளும் இப்பாதை வழியாக பயணிக்கின்றன.

யாழ். குடாநாட்டு மக்கள், இப்பாதை மூடப்பட்டிருப்பதால் கடந்த பல வருடங்களாக பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து அவசரத் தேவைகளுக்காக தென்பகுதிக்கு வருவோர் கப்பலையும் விமானத்தையும் நம்பி பல நாள்கள் காத்து இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உள்ளது.

இம் மக்களின் கஷ்டங்களை போக்கும் வகையில் பாதையை உடனடியாக புனரமைக்குமாறு ஜனாதிபதி எனக்கு உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பாதை புனரமைக்கப்பட்டு விட்டது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு கிடைத்தவுடன் பாதை திறக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# பிரபாகரனின் உடல் தகனம் செய்யப்பட்டு அஸ்தி இந்து சமுத்திரத்தில் எறியப்பட்டு விட்டது

## இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, மே.25

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தகனம் செய்துவிட்டனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் பேட்டியளிக்கையில் மேற்கண்டவாறு கூறியதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் கூறுகையில்:

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெற்ற கடும் தாக்குதலையடுத்து செவ்வாய்க்கிழமை காலை பிரபாகரனின் உடல் அடையாளம் காணப்பட்டது. நாம் அதே பிரதேசத்தில் பிரபாகரனின் உடலைத் தகனம் செய்து அஸ்தியை இந்து சமுத்திரத்தில் எறிந்தோம். பிரபாகரன் இறக்கும் முன்னர் நாங்கள் யுத்தத்தில் வெற்றியடைந்து விட்டதாக நான் அறிந்து கொண்டேன். ஆனால், அவரது மரணம் ஊர்ஜிதமான பின்னர் நான் பெரு மகிழ்ச்சியடைந்தேன் என்று குறிப்பட்டுள்ளார்.

கிட்டத்தட்ட நான்கு தசாப்தகாலமாக இடம்பெற்று வந்த கசப்பான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதுடன் புலிகளின் முழுத் தலைமைத்துவமே கொல்லப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

# மாகாணமட்ட கராத்தே போட்டியில் கலந்துகொள்ள 25 பேர் அணி புறப்படுகறது

வலி.வடக்கு,மே 25

எட்டு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் யாழ்.மாவட்டத்தில் இருந்து மாகாண மட்டப் போட்டியில் கராத்தே வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் இடம் பெற்ற கராத்தே போட்டியில் ஆண்கள், பெண்கள் அணியினர் கலந்து கொண்டதைத் தொடர்ந்து இதுவரை கராத்தே அணிகள் யாழ்.மாவட்டத்தில் இருந்து கலந்து கொள்ளவில்லை.

திருகோணமலையில் நடைபெறவுள்ள கராத்தே போட்டியில் கலந்து கொள்வதற்காக நாளை செவ்வாய்க்கிழமை 25 வீரர்களைக் கொண்ட அணியினர் சாவகச்சேரி விளையாட்டு அலுவலர் க.முகுந்தன் தலைமையில் கப்பல் மூலம் புறப்படவுள்ளனர்

திருகோணமலையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இப் போட்டிகளில் வெற்றிபெறும் அணி வீரர்கள் தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதிகளைப் பெறுவார்கள்.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு கலந்து கொண்ட அணியில் வீராங்கனைகள் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ள போதும் இம்முறை வீராங்கனைகள் எவரும் கராத்தே போட்டிகளில் யாழ்.மாவட்டம் சார்பாக கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

# கனகரட்ணம் எம்.பி.யை விடுவிக்க கூட்டமைப்பினர் நடவடிக்கை

கொழும்பு, மே.25

குற்றப் புலனாய்வுத் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்னத்தின் விடுதலை குறித்து தமது கட்சி சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித் துள்ளார்.

கடந்த 8 மாதங்களுக்கு மேலாக வன்னியில் தங்கியிருந்து மக்களுக்கு தன்னால் முடிந்தவரை சேவையாற்றி வந்தவர். இருப்பினும் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்து எங்களால் தகவல் பெற முடியாத நிலை இருந்தது.

இப்படியான நிலையில் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த நேற்று எதிர்பாராத வகையில் அவர் அழைத்து வரப்பட்டமை எமக்கு சற்று ஆறுதலை அளிக்கின்றது. அவரது விடுதலை குறித்து எமது கட்சி பல்வேறு வகைகளில் நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் சிவநாதன் இவரது விடுதலை தொடர்பாக பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றார் எதிர்வரும் 26 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது அந்த அமர்விற்கு அவரை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் குறித்து கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பட்டார்.

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,மே.25

காரைநகர் கிழ வன்காடு கந்தசாமி-ஆலயத்தில் எதிர் வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற் றோதல் இடம் பெறவுள்ளது.

காலையில் இடம்பெறும் விஷேட பூசை வழிபாடுகளை அடுத்து திருவாசக முற்றோதல் நடைபெறும்.

(203-250)

# வீதிப் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பரணம், மே 25

தெல்லிப்பழை சந்தியில் இருந்து கட்டுவன் வரையான பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வீதியை தார் ஊற்றி புனரமைப்புச் செய்வதற்கு முன்னேற்பாடாக தற்போது கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. (203-224)


## திருமண அழைப்பும் வாழ்த்தும்

நிகழும் மங்களகரமான 2009 ஆம் ஆண்டு இன்று (25.05.2009)
திங்கட்கிழமை காலை 6.30 மணியிலிருந்து 8.00 மணி வரையுள்ள
சுப முகூர்த்த வேளையில்

ஏமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
சுபாநந்திரன் B.A
(ஆசிரியர்-அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைச் செல்வி
நிறாஜினி (B.B.A)
(உதவிக் கணக்காளர், யாழ்ப்பாண நீதிமன்றம்)
அவர்களுக்கும்

தூய ஆவியின் துணைகொண்டு சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து நடைபெறும் திருமணத் திருப்பலியில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி அருளம்பலம்
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

திரு.திருமதி V.செல்வராஜன்
211, பலாலி வீதி,
கோண்டாவில்.
தொ.பே:- 021 222 6282

இரு வீட்டார் அழைப்பு

வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா
சகோதரர்கள்: அ.டானியல் சுரேந்திரன் (Teacher-St.J.c)
அ.போல் சுயந்திரன் (Engineer Singpore)
அ.அன்ரன் சுதாகரன் (Engineer Singpore)
அ.ஐசாக் விஜயகாந்தன் (Jaffna University)



## தவறிவிட்டது

நொக்கியா கையடக்கத் தொலைபேசி (மொடல் 6300) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியுடன் அல்லது தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். ரூபா 5000/= சன்மானம் வழங்கப்படும். பொது முகாமையாளர், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம், இல 100,பிரதான வீதி, யாழ்ப்பாணம். (யாழ் சிறைச்சாலை முன்பாக) T.P 0212222347



## கண்ணீர் அஞ்சலி



"தம் உயிரைக்காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டு தம்மையே அழித்துக்கொள்கிற எவரும்வாழ்வடைவார்,"

(புனித மத்தேயு 16:25)

இறைபதமடைந்த யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்சங்க ஆயுள்கால உறுப்பினரான

தியாகச் செம்மல் மறைத்திருத்தூதர் அருட்தந்தை

மரியாம்பிள்ளை ததேயூஸ் சறத்ஜீவன்

அடிகளின் திடீர்மறைவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல எம் சமூகத்தினருக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். இறைவனடி இணைந்த அடிகளும் ஏனையோரும் சமாதான ஒளியில் ஒளிர எம் உள்ளம் உருகி கண்ணீர் சொரிந்து இயேசுவை இறைஞ்சுகிறோம்.

இல.59,
புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர், கௌரவ செயலர்,
செயற்குழு உறுப்பினர்கள்.
யாழ். S.P.C - O.B.A.

(85561)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டுப் படைகளின் தாக்குதலில் ஆப்கானில் 60 தலிபான்கள் பலி!

காபூல், மே 25

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் மார்ஜா என்னுமிடத்தில் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல்களில் 60 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். அவர்களால் கடத்தப்படவிருந்த 92 தொன் ஹெரோயின் போதைப்பொருட்களும் அழிக்கப்பட்டன. காபூலிலுள்ள இராணுவத் தலைமையகம் இத்தகவல்களை வெளியிட்டது.

ஹெல்மாண்ட் மாநிலத்தின் தலைநகரான லஷ்கர் காவிலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மார்ஜா என்னும் சிற்றூர் மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதல்களில் படுகாயமடைந்தவர்களில் அநேகர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என்றும் தலைமையகம் குறிப்பிட்டது.

''மார்ஜா கடை வீதியில் தலிபான் தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடைகளிலும், கிடங்குகளிலும் போதைப் பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள்களின் எடை 92 தொன்களாக இருக்கும். இவை கடத்தப்படவுள்ளன என எமக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டது'' என தலைமையகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

''தகவல் தந்த உளவாளிகள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கடை வீதியிலிருந்த அப்பாவிகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது. அப்பாவிகள் வெளியேறியதும், வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களால் கடத்தப்படவிருந்த போதைப்பொருட்களும், தீவிரவாதிகளின் பெருவாரியான ஆயுதங்களும் அழிக்கப்பட்டன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் மாநிலத்தில் சட்ட விரோதமாக பாரிய அளவில் கஞ்சா நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கஞ்சாக் கடத்தலில் தீவிரவாதிகள் மும்முரமாக ஈடுபடுகிறார்கள். கஞ்சா விற்பனை மூலமாக திரட்டப்படும் நிதியில் அவர்கள் ஆயுதங்கள் கொள்வனவு செய்கிறார்கள். இம்மாநிலத்திலிருந்தே போதை வஸ்துகள் பிற இடங்களுக்குக் கடத்தப்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டுமானால், கஞ்சாத் தொழிலை முதலில் முடக்கவேண்டும் என அமெரிக்காவும் ஆப்கான் அரசை வலியுறுத்தி வருகின்றது. இதை முடக்குவதற்கு ஆப்கான் அரசால் அவ்வப்போது காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், அவை பலிதமாகவில்லை.

# பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கைக்கு அல் - குவைதா தலிபான்கள் எச்சரிக்கை

லாகூர், மே 25

பாகிஸ்தான் வட-மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள தங்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல், பாரதூரமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று அல்-குவைதா தீவிரவாதிகளும், தலிபான் தீவிரவாதிகளும் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அஸிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரஜா கிலானி, உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், இராணுவத் தளபதி ஆகியோருக்கு கூட்டுக் கடிதங்கள் மூலமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஆளும் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மத்திய தகவல் செயலர் பாஜியா வஹாப், சனிக்கிழமை தாம் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டி யொன்றில் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அவர் தம் பேட்டியில், ''வட-மேற்குப் பகுதியின்போது இராணுவம் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும் என இந்த தீவிரவாதிகள் மிரட்டியுள்ளார்கள். அவர்களின் கூட்டுக் கடித நகல்கள் ஜனாதிபதி, பிரதமர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதத்தில் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களும் இடம் பெற்றுள்ளன'' என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இதனால் இவற்றை வெளிப்படையாகச் சொல்லவோ, பகிரங்கப்படுத்தவோ நான் விரும்பவில்லை. நானும் தலிபான்களுக்கு எதிராகப் பொது இடங்களில் பேசி வருகின்றேன். அதனால் அவர்கள் என்னையும் கண்டித்துள்ளார்கள். எனக்கும் மிரட்டல் விடுத்துள்ளார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அவர்களின் மிரட்டல்களுக்கெல்லாம் நாம் அஞ்சப் போவதில்லை. பாகிஸ்தானின் கட்டுக்கோப்பும், இறையாண்மையும், ஆட்புல ஒருமைப்பாடும் என்றும் காக்கப்படும். பாகிஸ்தான் மண்ணிலிருந்து தீவிரவாதிகள் முற்றும்முழுதாக ஒழிக்கப்படும் வரை இராணுவத் தாக்குதல் நீடிக்கும்'' என்றும் பாஜியா வஹாப் மேலும் தம் பேட்டியில் சூளுரைத்துள்ளார்.

# அமெரிக்காவில் நில நடுக்கம்

கலிபோர்னியா, மே 25

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நில நடுக்கம் ஏற்பட்டது. வீடுகளும் கட்டடங்களும் குலுங்கின. நில நடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. நில நடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.7 புள்ளிகளாகப் பதிவாகி இருந்தது.

# உயர்ந்த மலை உச்சியிலிருந்து குதித்து தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி தற்கொலை!



சியோல், மே 25

தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி ரோ மூ யுன் சனிக்கிழமை மலையிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு வயது 62. அவர் மீது கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனால் அவர் மனமுடைந்து இம் முடிவை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

அவர் தாம் தங்கியிருந்த போங்கா கிராமத்துக்கருகே உள்ள மலையில் ஏறி, அதன் உச்சியிலிருந்து கீழே குதித்துள்ளார். இதனால் அவரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் உள்ளூர் நேரப்படி காலை 8.15 மணிக்கு பூசன் நகர வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் இறந்து விட்டார் என டாக்டர்கள் அறிவித்தனர்.

2003 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த அவர் தாம் கறைபடாத அரசியல் தலைவர் என்பதில் பெருமிதம் கொண்டிருந்தார். எனினும், அவர் பதவியிலிருந்தபோது ஒரு தொழில் அதிபரிடம் 30 கோடி ரூபாயை இலஞ்சம் வாங்கினார் என அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் அவரின் உறவினர்களில் சிலரும் தண்டிக்கப்பட்டனர். இவ் வழக்குத் தொடர்பாக கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி அவரிடம் 10 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது.

தற்கொலை செய்வதற்கு முன்னர் அவர் தாம் எழுதி வைத்திருந்த தகவல் குறிப்பில், ''வாழ்க்கை மிகவும் கடினமாக உள்ளது. ஏராளமான மக்களை அவதிக்குள்ளாக்கியுள்ளேன். அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான இவரின் தற்கொலை தென் கொரியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரோ மூ யுன் ஜனாதிபதி பதவியிலிருந்தபோது இவர் மீது ஏராளமான ஊழல், முறைக்கேடு குற்றச்சாட்டுகள் எழுந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரோ ஒரு எளிமையான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் கல்லூரி சென்று படித்ததில்லை. ஊழலற்ற ஆட்சி, வடகொரியாவுடன் சமாதானம் போன்ற வாக்குறுதிகளை முன்னிறுத்தி நாட்டின் ஜனாதிபதியானவர்.

சமீப மாதங்களாக அவர் மீது ஊழல் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவற்றை அவர் மறுத்திருந்தார்.

# பிரேசிலில் விமான விபத்து: அமெரிக்கர் உட்பட 11 பேர் பலி

பிரேசில், மே 25

பிரேசிலில் சிறிய ரக ஜெட் விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் அமெரிக்க வர்த்தகர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்து சுற்றுலா நகரமான டிரான்கோசோவில் நேரிட்டது. கிங் ஏர் 350 வகையைச் சேர்ந்த சிறிய ரக ஜெட் விமானம் சாவோ பாவலோ நகரிலிருந்து டிரான்கோசோவுக்கு வந்தது.

ஓடுபாதையில் விமானத்தை இறக்கும்போது, கடும் சூறாவளி காரணமாக விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 8 பயணிகள், 3 விமான ஊழியர்கள் ஆகியோர் உட்பட 11 பேர் இறந்தனர். இந்த விபத்தில் பயணிகள் எவரும் உயிர் தப்பவில்லை.

இவ் விமான விபத்தில் அமெரிக்க வர்த்தகரும், சாவோ பாவ்லோவை மையமாகக் கொண்டு நிதி நிறுவனம் நடத்திவந்தவருமான வர்த்தகர் ரோஜர் ஐயன்ரைட், அவரது மனைவி, இரு குழந்தைகள் ஆகியோரும் உயிரிழந்தனர் என உள்ளூர் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 10பேர் பலி; 70 பேர் படுகாயம்!

இஸ்லாமாபாத், மே 25

பாகிஸ்தானின் வட-மேற்கு நகரான பெஷாவரிலுள்ள மிகப்பழைமையான தஸ்வீர் மகால் என்னும் படமாளிகைக்கருகில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 10 பேர் பலியாயினர். எழுபதுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

குண்டுதாரி 100 கிலோ வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் ஒன்றை வேகமாகச் செலுத்தி வந்து, படமாளிகைக்கருகில் குண்டுகளை வெடிக்க வைத்துள்ளார். பயங்கரக் குண்டு வெடிப்புகளால், படமாளிகையின் முன்பகுதி இடிந்து விழுந்து விட்டது.

இக்குண்டு வெடிப்புகளால் பெஷாவர் நகரே குலுங்கியது. நகரின் மையப் பகுதியிலுள்ள கபூலி சந்தைப் பகுதியில் பல கட்டடங்கள் சரிந்து விழுந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் பலியாயினர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத்தற்கொலைத் தாக்குதல்களுக்கு எந்தவொரு தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப் பேற்கவில்லை. எனினும், உள்ளூர் தலிபான் தீவிரவாதிகளே இக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்வாட் பள்ளத்தாக்கில் தலிபான்கள் மீது பாகிஸ்தான் அதிரடி இராணுவ நடவடிக்கையை எடுத்து வருகிறது. இதற்குக் கண்டனம் தெரிவித்து, தலிபான் தீவிரவாதிகள் பெஷாவரில் அடிக்கடி தாக்குதல்கள் நடத்தி வருகிறார்கள்.

பெஷாவரில் கடந்த வாரம் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# எரித்திரியாவின் நடவடிக்கைக்கு ஆபிரிக்க ஒன்றியம் கண்டனம்

மொகடிஷு, மே 25

''சோமாலியாவிலுள்ள இஸ்லாமியவாத கிளர்ச்சிக்காரர்களுக்கு எரித்திரியாவே ஆயுதங்கள் வழங்கி வருகிறது. இதன் மூலம் சோமாலியாவின் அரசுக்கும், அந்நாட்டின் கட்டுக்கோப்புக்கும் அது குந்தகமாகச் செயற்பட்டு வருகிறது. அதனால் ஐ.நா. அதனை தடை செய்யவேண்டும்.''

இவ்வாறு ஆபிரிக்க ஒன்றியம் ஐ.நாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆபிரிக்க ஒன்றியம் தனது உறுப்பு நாடுகளில் ஒன்றுக்கு எதிராக, இப்படி ஒரு நடவடிக்கை எடுத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும். அதேவேளை, இக்குற்றச்சாட்டை எரித்திரியா அடியோடு மறுத்துள்ளது.

எரித்திரிய தகவல் தொடர்பு அமைச்சர் அலி அப்து இக்குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். அத்துடன், "ஆபிரிக்க ஒன்றியம் ஒரு திறனற்ற அமைப்பு. வலிமையற்ற ஒரு கூட்டமைப்பு. எரித்திரியா இந்த அமைப்பில் இனியும் அங்கம் வகிக்காது. அது தனது உறுப்புரிமையை இடைநிறுத்திக் கொள்கிறது'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சோமாலியாவில் உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்கும் பணியில், ஆபிரிக்க ஒன்றியம் தனது நான்காயிரம் துருப்பினரை ஈடுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும், அரச படைகளாலும், ஆபிரிக்க ஒன்றிய படைகளாலும் சோமாலியாவின் பெரும் பகுதிகளை இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குளிருந்து மீட்க முடியவில்லை.

சோமாலியாவில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளாலும், சண்டையாலும், ஆயிரக்கணக்கானோர் தம் வீடுகளை விட்டு வெளியேறி, தலைநகரான மொகடிஷுவின் எல்லைப்புறங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

# தலிபான்களின் விசித்திரமான தண்டனை

இஸ்லாமாபாத், மே 25

பாகிஸ்தானின் வட-மேற்கு மாநிலத்தில் ஆதிக்கம் செலுத்திவரும் தலிபான் தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டை மீறி, ஷேர்ட்டும் காற்சட்டையும் அணிந்த ஒருவருக்கு விசித்திரமான தண்டனை அளித்தனர். தலிபான்கள் அந்நபரைப் பிடித்து நையப் புடைத்தும், உதைத்தும் தள்ளிவிட்டனர்.

தலிபான் தீவிரவாதிகள் பொதுமக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றார்கள். இவற்றில் உடை கட்டுப்பாடும் ஒன்று. ஆண்களும், பெண்களும் எப்படி உடைகளை அணியவேண்டும் என்பது தொடர்பான விதிமுறைகளை அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

இதன்படி ஆண்கள் உடல் முழுவதையும் மறைக்கும் குர்தா போன்ற ஆடை அணிய வேண்டும். பெண்கள் பர்தா அணியவேண்டும்.

இந்த உத்தரவை ஏற்று வட-மேற்கு பிராந்தியத்தில் அனைவரும் அவ்வாறே உடை அணிகின்றனர். அலுவலக ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோரும் நீள காற்சட்டைக்குப் பதிலாக குர்தா அணிகின்றனர்.

இந்நிலையில் பெஷாவர் நகரில் மருந்து விற்பனை பிரதிநிதி ஒருவர் காற்சட்டை அணிந்து சென்றார். அவரை தலிபான் தீவிரவாதிகள் பிடித்துத் துப்பாக்கிக் கட்டையால் அடித்து உதைத்தனர். அதனால் அவர் மயங்கி விழுந்தார்.

அவரது சட்டைப் பைக்குள் தலிபான்கள் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்றனர். உடை விதிகளை யார் மீறினாலும் இந்தக் கதிதான் ஏற்படும் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

உலக அரங்கில்

# இத்தாலி ஆண்களுக்கு ஆயுள் அதிகம்!

இத்தாலி அருகேயுள்ள சிறிய நாடான சான் மானோவிலேயே ஆண்கள் அதிக ஆண்டுகள் உயிர் வாழ்கிறார்கள். இவர்களின் ஆயுள் 81 ஆண்டுகள் என உலக சுகாதார அமைப்பு அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அது மேலும் கூறியிருப்பவை:-

இந்தியாவில் ஆண்களைவிட பெண்களுக்கு ஆயுள் அதிகம். பெண்களின் சராசரி வாழ்க்கை 65 வயதாகவும், ஆண்களுக்கு 63 ஆகவும் உள்ளது. எனினும், ஆண்டுதோறும் ஆயிரம் பெண் குழந்தைகளில் 55 குழந்தைகள் வரை ஒரு வயதுக்குள் இறந்து விடுகின்றன. அதேபோல், ஆயிரம் பெண் குழந்தைகளுக்கு 77 குழந்தைகள், 5 வயதுக்குள் இறந்துவிடுகின்றன.

பாகிஸ்தானிலும், நேபாளத்திலும் இதே நிலைதான். பாகிஸ்தானில் பெண்களின் வாழ்க்கை சராசரி 64 வயதாகவும், ஆண்களுக்கு 63 ஆகவும் உள்ளது.

நேபாளத்தில் பெண்களுக்கு 63 ஆகவும், ஆண்களுக்கு 62 ஆகவும் உள்ளது. அதே நேரத்தில் ஜப்பானில் பெண்களின் வாழ்க்கை 86 வயதாகவும், சீனா, இலங்கையில் 75 ஆகவும் உள்ளது. இத்தாலி அருகேயுள்ள மிக சிறிய நாடான சான் மரினோவில் ஆண்களின் வாழ்க்கை 81 ஆண்டாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 1 இல் கூடுகிறது நாடாளுமன்றம்

## சபாநாயகர் தேர்வு 3 ஆம் திகதி

புதுடில்லி, மே 25

புதிய மக்களவை ஜூன் முதலாம் திகதி கூடுகிறது. புதிய எம்.பிக்கள் முதலாம், இரண்டாம் திகதிகளில் பதவியேற்கின்றனர். சபாநாயகர் தேர்தல் 3ஆம் திகதி நடக்கிறது.

மக்களவைத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஆட்சி அமைத்துள்ளது.

பிரதமராக மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் பதவியேற்றார். அவருடன் 19 அமைச்சர்களும் பதவியேற்றனர். புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை நடந்தது.

இதில் 15ஆவது மக்களவையை ஜூன் முதலாம் திகதி கூட்ட முடிவு செய்யப்பட்டது. முதல் 2 நாள்களும் எம்.பிக்கள் பதவியேற்கும் நிகழ்ச்சி நடக்கிறது. 3ஆம் திகதி சபாநாயகர் தேர்தல் நடக்கிறது. 4ஆம் திகதி மாநிலங்களவைக் கூட்டம் தொடங்குகிறது. அன்று இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரதிபா பட்டீல் உரையாற்றுகிறார்.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது 5, 8, 9ஆம் திகதிகளில் விவாதம் நடக்கிறது. 9ஆம் திகதியுடன் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிகிறது.

மக்களவைத் தேர்தல் காரணமாக கடந்த பெப்ரவரி மாதம் முழுமையான வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படவில்லை. அரசின் செலவினங்களுக்காக துணை மானியக் கோரிக்கை மட்டுமே நிறைவேற்றப் பட்டது. ஜூலை 31ஆம் திகதி வரையிலான செலவினங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் உள்ளது. 2009 - 2010ஆம் ஆண்டுகளுக்கான முழுமையான வரவு-செலவுத் திட்டம் ஜூலை 31ஆம் திகதிக்குள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஒருவேளை, அவ்வாறு முழுமையான வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய முடியாவிட்டால், மிகக் குறுகிய காலத்துக்கு மட்டும் மற்றொரு துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படும்.

அமைச்சரவைக்கூட்டத்தில் பிரதமர் பேசுகையில்-

தேர்தலின் போது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்துள்ளோம். அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். என அமைச்சர் சிதம்பரம் தெரிவித்தார்.



முதல்வர் கருணாநிதியை, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் நேற்று முன்தினம் இரவு சந்தித்தபோது.........




# 10ஆம் வகுப்புத் தேர்வில் சென்னையில் இலங்கை மாணவி கிஷாந்தி முதலிடம்



மாணவி கிஷாந்திக்கு பாடசாலை முதல்வர் வாழ்த்துத் தெரிவித்தபோது.....

சென்னை, மே 25

10ஆம் வகுப்புத் தேர்வில் சென்னை மாவட்ட அளவில் இலங்கை மாணவி கிஷாந்தி 486 மதிப்பெண்களுடன் முதல் இடம் பிடித்தார்.

கிஷாந்தியின் குடும்பத்தினர் 3 ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்தனர். இவரது தந்தை ரவீந்திரன் சென்னை விருகம்பாக்கத்தில் மளிகை வியாபாரம் செய்து வருகிறார்.

இவர் சென்னை, அசோக் நகர் வேளாங்கன்னி மெட்ரிகுலேஷன்பாடசாலையில்படித்தார்.

இம் மாணவி பெற்ற மதிப்பெண் வருமாறு -

தமிழ் - 96, ஆங்கிலம்- 95, கணிதம்- 99, அறிவியல் - 99, சமூக அறிவியல்- 97.

சாதனை குறித்து கிஷாந்தி கூறுகையில் -

இலங்கையில் தமிழ் வழியில் 8ஆம் வகுப்பு வரை பயின்றேன். சென்னையில் 9ஆம் வகுப்பில் மெட்ரிகுலேஷன் பாடசாலையில் சேர்ந்தபோது படிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. இலங்கையில் பாடங்களை அதிகம் மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. தமிழகம் வந்து தான் மனப்பாடம் செய்ய ஆரம்பித்தேன். ஆனாலும் தனியார் வகுப்புகளுக்குச் செல்லாமல் நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்று எண்ணினேன்.

தேர்வு நேரத்தில் 3 மணி நேரம் மட்டுமே தூங்கினேன். எதிர்காலத்தில் டாக்டராக வர ஆசைப்படுகிறேன் - என்றார் கிஷாந்தி.

# அமைச்சரவையில் பங்கேற்க தி.மு.க சம்மதம் மன்மோகன் சிங்குக்கு கருணாநிதி நன்றி

மத்திய அமைச்சரவையில் தி.மு.க. பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தமைக்காக முதலமைச்சர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். மத்திய அமைச்சரவையில் பங்குபற்றுவது குறித்து இன்று அல்லது நாளை முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான புதிய அமைச்சரவையில் தி.மு.க. இடம்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. வேண்டிய அமைச்சுகள், வேண்டிய பிரமுகர்களுக்கு கிடைக்காதமையால் அதிருப்தி அடைந்த தி.மு.க. தலைவரும் மற்றும் முக்கிய நிர்வாகிகளும் சென்னை திரும்பினர்.

இதையடுத்து காங்கிரஸ் தரப்பில் இருந்து தொடர்ந்து நடைபெற்ற பேச்சுகளுக்குப் பின்னர் பிரதமர் மன்மோகன் சிங், தி.மு.க. மத்திய அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

இதற்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் கருணாநிதி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து அமைச்சரவை அமைப்பதற்கான காலகட்டத்தில் சில தனியார் தொலைக்காட்சிகள் திட்டமிட்டு தி.மு.க. அமைச்சர்களின் பதவி குறித்து பொய்ப் பிரசாரம் செய்து வந்தனர். இதற்கு டில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது பிரதமர் மன்மோகன் சிங் மறுப்புத் தெரிவித்தமைக்கும், மத்திய அமைச்சரவையில் தி.மு.க. பங்கேற்க வேண்டும் என்று பிரதமரே அழைப்பு விடுத்தமைக்கும் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. மத்திய அமைச்சரவையில் பங்கேற்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும் - என்றுள்ளது.

# தி.மு.கவுடன் கருத்து வேறுபாடா? அடியோடு மறுக்கிறார் குலாம் நபி



புதுடில்லி, மே 25

தி.மு.கவுடன் கருத்து வேறுபாடு ஏதும் இல்லை. காங்கிரஸின் முக்கிய தோழமைக் கட்சியான தி.மு.க. விரைவில் அரசில் சேரும் என்று நம்புகிறோம். இரு கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுள்ளது எனக் கூறுவது வெறும் ஊகத்தில்தான். தி.மு.க. இப்போது கட்சிக்குள் ஆலோசனை நடத்துகிறது - என்று மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

2004ஆம் ஆண்டு தேர்தல் முடிவுக்குப் பின்னர் கூட அரசில் சேருவது குறித்து முடிவு செய்ய தி.மு.க. 9 நாள்கள் எடுத்துக்கொண்டது.

அமைச்சர் பதவிகள், பொறுப்புகள் குறித்து தி.மு.கவுடன் என்ன பேசப்பட்டது என்று தெரிவிக்கமாட்டேன், பேச்சுகள் இன்னமும் முடியவில்லை - என்றார் ஆசாத்.

அமைச்சர்களாக யார் யாரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தி.மு.க. தெரிவித்து, அதில் உங்களுக்கு யாரையாவது சேர்ப்பதில் தயக்கம் இருக்கிறதா என்று செய்தியாளர்கள் கேட்டபோது, பேச்சு இன்னமும் அந்த நிலையை எட்டவில்லை - என்றார்.

# சூகி வீட்டுக்கு அமெரிக்கர் சென்றதேன்? அலசுகிறது மியான்மர் அரச தரப்பு

மியான்மர் ஜனநாயக ஆதரவு இயக்கத் தலைவர் ஆங் சான் சூகியை (வயது 63) அவரது இல்லத்துக்கு இரகசியமாகச் சென்று சந்தித்த அமெரிக்கர் ஜோன் யெட்டா, சூகியின் நண்பராகவோ அல்லது இரகசிய ஏஜென்டாகவோ இருக்கலாம் என ஹொங்ஹொங்கிலுள்ள மியான்மர் தூதர், தூதரக இணையத்தள மூலம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கர் யெட்டா (வயது 53) இங்கா ஏரிவழியாக நீந்திச் சென்று வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியைச் சந்தித்துப் பேசியுள்ளார். அவரது இல்லத்திலேயே மே 3 முதல் 5 ஆம் திகதி வரை தங்கி இருந்துள்ளார்.

சூகி வீட்டுக்கு அமெரிக்கர் சென்றது ஏன்? என்ன பேசினார்? என்பது புதிராகவுள்ளது. அவர் இரகசிய ஏஜென்டா? அல்லது நண்பரா? என்பது தற்போதைக்கு புலப்படவில்லை. அமெரிக்கர் யெட்டா சூகியைச் சந்தித்து விட்டு கரை திரும்பியபோது பொலிஸாரிடம் சிக்கினார். அமெரிக்கர் யெட்டா மற்றும் ஆங் சான் சூகி [illegible] வுள்ளனர் [illegible]

# இலங்கைக்கான இந்தியத் தூதுவராக தமிழரை உடன் நியமிக்க வேண்டும்!

## ஈழத்தமிழர் வாழ்வுரிமை மீட்பு இயக்கம் கோரிக்கை

சென்னை, மே 25

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக தமிழர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும் - என்று ஈழத் தமிழர் வாழ்வுரிமை மீட்பு இயக்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த இயக்கத்தின் கூட்டம் சென்னை பெரியார் திடலில் நேற்றுமுன்தினம் நடந்தது. கூட்டத்திற்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கினார். இதில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மா.மு.க. சேதுராமன், பொன்.குமார், கவிஞர் மு.மேத்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், 'ஈழத்தமிழர்களைக் காப்போம் என்னும் பெயரில் முதலாம் திகதி சென்னை சைதாப்பேட்டை, 7ஆம் திகதி திருச்சி, 13ஆம் திகதி மதுரையில் பொதுக்கூட்டம்-பேரணி நடத்துவது.

இலங்கையில் உணவு, மருந்து இன்றி போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் உதவிகள் செய்ய வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவை போர் குற்றவாளியாக உலக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

தமிழகஎம்.பிக்களை உள்ளடக்கியகுழுஒன்றை இலங்கைக்கு அனுப்பி உண்மைகளைக் கண்டறிய இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலங்கைக்கான இந்திய தூதுவராக தமிழர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும். போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# ஆண்களை விட பெண்களுக்கு இந்தியாவில் ஆயுள் அதிகமாம்

## உலக சுகாதார அமைப்பு தகவல்

புதுடில்லி, மே 25

இந்தியாவில் ஆண்களைவிட பெண்கள் அதிக ஆண்டுகள் உயிர் வாழ்கின்றனர் -என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியாவில் ஆண்களைவிட பெண்களுக்கு ஆயுள் அதிகம். பெண்களின் சராசரி வாழ்க்கை 65 வயதாகவும், ஆண்களுக்கு 63 வயதாகவும் உள்ளது. எனினும், ஆண்டுதோறும் ஆயிரம் பெண் குழந்தைகளில் சுமார் 55 குழந்தைகளாவது ஒரு வயதுக்குள் இறந்து விடுகின்றன. அதேபோல், ஆயிரம் பெண் குழந்தைகளில் 77 குழந்தைகள், 5 வயதுக்குள் இறந்து விடுகின்றன.

பாகிஸ்தானிலும் நேபாளத்திலும் இதே நிலைதான். பாகிஸ்தானில் பெண்களின் வாழ்க்கை சராசரி 64 வயதாகவும், ஆண்களுக்கு 63 வயதாகவும் உள்ளது. நேபாளத்தில் பெண்களுக்கு 63 வயதாகவும் ஆண்களுக்கு 62 வயதாகவும் உள்ளது. அதே நேரத்தில் ஜப்பானில் பெண்களின் வாழ்க்கை 86 வயதாகவும், சீனா, இலங்கையில் 75 வயதாகவும் உள்ளது. இத்தாலி அருகே உள்ள மிக சிறிய நாடான சான் மரினோவில் ஆண்களின் வாழ்க்கை 81 ஆண்டுகளாக உள்ளது - என்றுள்ளது.

# சிகரெட் பிடிக்குமாறு சென்னையில் மும்தாஜிடம் ரசிகர்கள் கலாட்டா....!

சென்னையில் திரையரங்கு ஒன்றில் நடிகை மும்தாஜிடம் சிகரெட்டை நீட்டி, ''ஊதுங்க மேடம்'' என ரசிகர்கள் கலாட்டா செய்தமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

ஷக்தி சிதம்பரம் தயாரித்து, இயக்கம் செய்த 'ராஜாதிராஜா' என்ற படம், சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் ராகவேந்திரா லோரன்ஸ் கதாநாயகனாக நடித்திருக்கிறார். மீனாட்சி, காம்னா, ஸ்னிக்தா ஆகிய மூன்று பேரும் கதாநாயகிகளாக நடித்திருக்கிறார்கள். 'சைதை சைலஜா' என்ற பெயரில், வில்லியாக மும்தாஜ் நடித்திருக்கிறார்.

படத்தில் அவர் அடிக்கடி சிகரெட் பிடிப்பது போல் காட்சிகள் வருகின்றன.

இந்தப் படத்தைப் பார்ப்பதற்காக, சென்னை அசோக்நகரில் உள்ள மினி உதயம் திரையரங்குக்கு மும்தாஜ் சென்றார். அவருடன் இயக்குநர் ஷக்தி சிதம்பரம் மற்றும் உதவி இயக்குநர்களும் சென்றனர்.

திரையரங்கில் கடைசி வரிசையில், ஒரு மூலையில் உள்ள இருக்கையில் மும்தாஜ் [illegible] மும்தாஜ் படம் பார்க்க வந்திருப்பதை, அவருக்கு முன்னால் அமர்ந்திருந்த ரசிகர்கள் பார்த்து விட்டார்கள். படத்தில் மும்தாஜ் வருகின்ற காட்சிகளில் எல்லாம் ரசிகர்கள் சத்தம் போட்டுக் கிண்டல் செய்தார்கள்.

இடைவேளை வந்தபோது, அந்த ரசிகர்கள் அனைவரும் மும்தாஜை சூழ்ந்து கொண்டார்கள். அவர்களை இயக்குநர் ஷக்தி சிதம்பரமும், உதவி இயக்குநர்களும் விலக்க முயன்றனர். முடியவில்லை. மும்தாஜ், ரசிகர்கள் கூட்டத்துக்குள் சிக்கிக்கொண்டார்.

ஒரு ரசிகர் மும்தாஜிடம் சிகரெட்டை நீட்டி, ''ஊதுங்க மேடம்'' என்றார். இதனால், மும்தாஜ் ஆத்திரம் அடைந்தார். கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டு, ''படத்துக்காகத் தான் சிகரெட் பிடித்தேன். நிஜமாக எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது'' என்றார். உங்களுடன் நின்று போட்டோ எடுக்க வேண்டும் என்று சில ரசிகர்கள் வற்புறுத்தினர்.

அது, இரவு காட்சி என்பதால் பொலிஸார் அங்கு இல்லை. நிலைமையை புரிந்து கொண்ட மும்தாஜ், ரசிகர்களுடன் நின்று போட்டோ எடுத்துக்கொண்டார். பின்னர் அவர்களிடம் இருந்து விடுபட்டு, ஓட்டமும் நடையுமாக வெளியே வந்து அவர் காரில் ஏறிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை வீழ்த்தி சம்பியனானது டெக்கான் கிப்ஸ் அதிரடி; 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் ஓஜா!

ஜெகன்னர்ஸ் பேர்க், மே 25

பரபரப்பான இறுதியாட்டத்தில் 6 ஓட்டங்களால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி இரண்டாவது ருவன்ரி - 20 போட்டியில் சம்பியனானது டெக்கான் சார்ஜர்ஸ்.


தென்னாபிரிக்காவில் கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 36 தினங்களாக நடைபெற்று வந்த இரண்டாவது ஐ.பி.எல்.போட்டித் தொடரில் இறுதிப் போட்டி ஜென்னர்ஸ் பேர்க்கிள் 'நியூ வோண்டறர்ஸ்' மைதானத்தில் நடைபெற்றது.

இதில் அரையிறுதிப் போட்டியில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியை அதிரடியாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்த டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் சென்னை சுப்பர் கிங்ஸை வீழ்த்திய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்படுத்தாட ஆரம்பித்த டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவரும் நம்பிக்கை நட்சத்திரமுமான அடம் கில்கிறிஸ்ட் ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் கும்ளேயினால் 'போல்ட்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். ஆனால் அணிக்கு நம்பிக்கையளிக்கும் விதத்தில் சிறப்பாக ஆடிய கிப்ஸ் ஆட்டமிழக்காமல் 3 பௌண்டறிகள், 2 சிக்ஸர்களுடன் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

சுமன் 10 ஓட்டங்களுடன் வினய் குமாரின் பந்தில் பண்டேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய



சைமன்ஸ் அதிரடியாகன துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். 21 பந்துகளில் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களைக் குவித்தார். கும்ளேயின் பந்தில் போல்டானார். சிறந்த இளம் வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட (23 வயதுக்குட்பட்ட) றோகித் சர்மா 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை வேணுகோபால் ரயோ ஓட்டமெதனையும் பெறாமலும் பிலாக்கியா 6 ஓட்டங்களுடன் வினய்குமாரின் பந்தில் 'எல்.பி. டபிள்யூ' முறையில் வெளியேறினார். ஹாரிஸ் 9 ஓட்டங்களுடனும் கிப்ஸ் 53 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

டெக்கான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. உதிரிகளாக 8 ஓட்டங்கள் கிடைத்தன.

பெங்களூர் றோயல்ஸ் சார்பில் பந்து வீசிய கும்ளே 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வினய்குமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கலீஸ் 16 ஓட்டங்களுடன் அர்.பி.சிங்கின் பந்தை'போல்ட்' ஆகி பெவிலியன் திரும்ப பண்டே 4ஓட்டங்களுடன் ஓஜாவின் பந்தில் கில்கிறிஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து இறங்கிய வான் டேர்மேர்வ் அதிரடியாக ஒரு பௌண்டறி 3 சிக்ஸர்களுடன் 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கில்கிறிஸ்டினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். ராவிட் 9 ஓட்டங்களுடன் ஹர்மிற் சிங்கிலின் பந்தில் போல்ட் ஆனார். ரெய்லர் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களும் நிலைத்து நின்று பெவிலியன் சென்றனர். கோலி 7, பௌச்சர் 5, பிரவீன்குமார் 2 என ஆட்டமிழந்தனர். உத்தப்பா 17 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் கும்ளே ஓர் ஓட்டத்துடனும் களத்தில் நின்றிருந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பெங்களூர் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

டெக்கான் சார்ஜர்ஸ் சார்பில் பந்து வீசிய ஓஜா 3 விக்கெட்டுக்களையும்



ஹார்மிற் சிங், சைமன்ஸ் தலா 2 விக்கெட்டுக்களை யும் ஹாரிஸ், ஆர்.பி.சிங் தலா ஒரு விக் கெட்டினையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்திய கும்ளே தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 2009 ஆம் ஆண்டின் ஐ.பி.எல். சம்பியனானது டெக்கான் சார்ஜர்ஸ். கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் இவ்வணி இரண்டு போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறமால் முதலாவது அணியாக வெளியேறியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த இளம் வீரர் விருது றோகித் சர்மாவுக்கு

ஜெகன்னர்ஸ் பேர்க், மே 25



இரண்டாவது ஐ.பி.எல். ருவன்ரி - 20 தொடரில் சிறந்த இளம் வீரருக்கான (23 வயதுக்குட்பட்ட) விருதினை டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் றோகித் சர்மா வென் றுள்ளார்.

இவ்விருதுக்கான வீரரைத் தெரிவு செய்யும் குழுவில் இந்தியாவின் முன்னாள் வீரர்களான சுனில் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, பட்டேலடி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இதன்மூலம் றோகித் சர்மாவுக்கு 23 லட்சம் ரூபா (இலங்கை மதிப்பில்) ரொக்கப்பரிசு கிடைக்கவுள்ளது.

இத்தொடரில் சர்மா 357 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன் 11 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

## ஆண்டுக்கு இரு தடவைகள் ஐ.பி.எல். தொடரை நடத்த முடிவு

லண்டன், மே 25

ஆண்டுக்கு இரண்டு முறை ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடரை நடத்த அதிரடியாக திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகளில் ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் தென்னாபிரிக்காவில் இரண்டாவது 'ருவென்ரி-20' தொடர் வெற்றிகரமாக நடக்கிறது. இதையடுத்து அமெரிக்கா மற்றும் கனடாவிலும் போட்டிகளை நடத்தலாம் என்று அணி உரிமையாளர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். இதுபற்றி விவாதிக்க ஜெகன்னர்ஸ்பேர்க்கில் இன்று அணி உரிமையாளர்கள் கூட்டம் நடக்கவுள்ளது. இது குறித்து லலித் மோடி கூறியவை வருமாறு:-

தென்னாபிரிக்காவுக்கு போட்டிகளை மாற்றும்போது பல சவால்களைச் சந்தித்தோம். போட்டியை வந்து பார்க்க வேண்டும் என ரசிகர்களை கட்டாயப்படுத்தவில்லை. ஆனாலும் ரசிகர்கள் பெருமளவில் வந்ததால், தொடர் பெரிய வெற்றி பெற் றுள்ளது. இனிமேல் ஐ.பி.எல். தொடரை எந்த நாட்டிலும், எந்த இடத்திலும் நடத்தலாம் என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

ஐ.பி.எல். தொடரை ஆண்டுக்கு இரு முறை நடத்தத் திட்டமிட்டு வருகிறோம். முதலாவது தொடர் இந்தியாவில் நடத்தப்படும். இரண்டாவது தொடர், ஏதாவது ஒரு வெளிநாட்டில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்த வாய்ப்பில் அமெரிக்கா முன்னிலையில் உள்ளது. ஆனால், அங்கு கிரிக்கெட் இன்னும் வளர்ச்சி நிலையில் தான் உள்ளது. ஐ.பி.எல். போட்டிகளை அமெரிக்க மக்கள் குடும்பத்துடன் மாலை நேரங்களில் கண்டு மகிழ வாய்ப்பாக அமையும். இந்தத் தொடருக்கு முன்பாக வெளிநாட்டு ரசிகர்களின் கிரிக்கெட் தாகத்தைத் தணிக்க வழியில்லாமல் இருந்தது. தற்போது உலகளாவிய ரசிகர்களை உருவாக்கியதில் திருப்தியடைகிறோம்.



ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை ஐ.பி.எல். தொடரை நடத்துவதால் டெஸ்ட் போட்டிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கூறுவதை ஏற்க முடியாது. சரியாகப் புரிந்து கொள்ளாமல் தான் இப்படிக் கூறுகின்றனர். உதாரணமாக இங்கிலாந் தில் பிரிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் நடக்கும் சமயத்தில், ஸ்பெயின் மற்றும் இத்தாலியின் லீக் தொடரும் நடக்கும். அனைத்து வீரர் களும் ஒரே தொடரில் பங்கேற்கவேண் டும் என்ற அவசியம் இல்லை. இப்போது இங்கிலாந்து; மேற்கிந்தியத் தொடர் நடக்கிறது. அவுஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்கவில்லை. அப்படி இருந்தும் ஐ.பி.எல். தொடர் வெற்றிகரமாகத்தானே நடக்கிறது.இவ்வாறு லலித் மோடி தெரிவித்தார்.

## பிரான்ஸ் ஓபன் ரென்னிஸ் ஆரம்பம் முன்னணி நட்சத்திரங்கள் களத்தில்

பரீஸ், மே 25

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரான்ஸ் ஓபன் ரென்னிஸ் போட்டி பரிஸில் நேற்று ஆரம்பமாகியது.

ஜூன் 7ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள்.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4 முறை கிண்ணத்தை வென்றவரும், உலகின் முதல் நிலை வீரருமான நடப்பு சம்பியன் ரபெல் நடால் (ஸ்பெயின்) தனது முதல் சுற்று ஆட்டத்தில் பிரேசில் வீரர் மார்கோஸ் டானியலைச் சந்திக்கிறார்.

உலகின் 2ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்ஸர்லாந்து), அல்பர்ட்டோ மார்டினை எதிர்கொள்கிறார். இத்தொடரில் நடால், பெடரர் இடையே கடுமையான போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் அனா இவானோவிச் (சேர்பியா), தனது முதல் சுற்று ஆட்டத்தில் இத்தாலி வீராங்கனை சாரா எர்ரானியை சந்திக்கிறார். சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றுவது யார் என்பதில் முதல் நிலை வீராங்கனை தினரா சபீனா (ரஷ்யா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), அனா இவானோவிச் (செர்பியா) ஆகியோர் இடையே விறுவிறுப்பான போட்டியை பார்க்கலாம் என்று கருதப்படுகிறது.

## 2011 உலகக் கிண்ணப் போட்டிகளை பாகிஸ்தானில் நடத்தாது விட்டால் கடும் விளைவுகள் ஏற்படும்

### எச்சரிக்கிறார் இஜாஜ்பட்

லாகூர் மே 22

எங்களைப் பிச்சைக் காரர்கள் போல் நடத்துவதை ஐசி.சி.யும் பி.சி.சி.ஐ.யும் நிறுத்த வேண்டும் எனக் கடுமையாகச் சாடியுள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் இஜாஜ்பட்

2011 ம் ஆண்டு உலகக் கிண்ணப்ப போட்டிகள் இந்தியா, இலங்கை,பங்களாதேஷ் ஆ[illegible] நாடுகளிலேயே நடைபெறும் என ஐ.சி.[illegible] அறிவித்ததை அடுத்து பாகிஸ்தான் சட்ட[illegible]தியாக நோட்டீஸ் அனுப்பியது.

இதன[illegible]யடுத்து இப்பிரச்சினையை முடிவுச்[illegible] கொண்டு வரும் முகமாக ஒரு தொகைப் பணத்தை இழப்பீடாக வழங்க முன்வந்தது இதற்குப் பதிலளித்த இஜாஜ் பாட் ஐ.சி.சி யும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபயும் எங்களைப் பிச்சைக்காரர்களைப் போல் நடத்துவதை நிறுத்த வேண்டும் பணம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தராது என்று கூறியதுடன் 2011 உலக கிண்ணப் போட்டிகளை தங்களைத் தவிர்த்து நடத்தினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர்.

இந்தியா, இலங்கை,பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் பாதுகாப்புப் பிரச்சினை உள்ளபோது பாகிஸ்தானை மட்டும் தனிமைப்படுத்தலாகாது - என்றார்.

## பிரேசில் அணியிலிருந்து ரொனால்டினோ நீக்கம்



அடுத்த மாதம் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தகுதிச் சுற்று உதைபந்தாட்டப் போட்டிகள் மற்றும் கான்பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்குமான பிரேசில் அணியில் நட்சத்திர வீரர்களான ரொனால்டோ, ரொனால் டினோ ஆகியோர் தெரிவுசெய்யப்பட வில்லை.

ஜூன் 6ஆம் திகதி உருகுவே அணியைச் சந்திக்கும் பிரேசில், 4 நாள்களுக்குப் பின்னர் தென் அமெரிக்க முன்னணி உதைபந்தாட்ட அணியான பராகுவே அணியைச் சந்திக்கிறது.

ஆனால், 4 புதுமுகங்களை அணியில் சேர்த்து ஆச்சரியமளித்தார். பயிற்சியாளர் துங்கா. கோல் காப்பாளர் விக்டர், கிளீபர், ஆந்ரே சான்டோஸ், நடுக்கள வீரர் ரமிரேஸ், சட்ரைக்கர் நில்மார் ஆகிய இந்தப் புதுமுகங்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ரொனால்டினோவை அணியில் தெரிவு செய்யா விட்டாலும், அவர் ஒரு சிறந்த வீரர் அவர் தனது சிறப்பான ஆட்டத்தை மீட்டெடுக்க அனைத்து உதவிகளையும் செய்வேன் என்று துங்கா தெரிவித்துள்ளார்.



கடந்த மார்ச் மாதம் ஈக்வெடார் அணிக்கு எதிரான 1- 1 என்று சமனான போட்டியில் பிரேசில் அணிக்காக விளையாடிய ரொனால்டினோ படுமோசமாக ஆடினார் என்ற செய்திகள் எழுந்தன.

மற்றொரு நட்சத்திரம் ரொனால்டோ 9 மாத காலக் காயத்திற்குப் பின்னர் கோரிந்தியான்ஸ் அணிக்காக 8 கோல்களை அடித்திருந்தாலும் அனைத்தும் பலவீனமான அணிகளுக்கு எதிராக என்பதால், அவரும் சிறிதுகாலம் காத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் துங்கா.

இது வரை நடைபெற்ற தென் அமெரிக்க சுற்று உலகக்கோப்பை தகுதி கால்பந்து போட்டிகளில் 12 ஆட்டங்களில் 21 புள்ளிகள் பெற்று பிரேசில் 2-வது இடம் பெற்றுள்ளது. 24 புள்ளிகள் பெற்று பராகுவே அணி முதலிடத்தில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் சேர தி.மு.க. முடிவு

## ஆற்காடு வீராசாமி தகவல்

சுமூக முடிவு ஏற்பட்டுள்ளதால் மத்திய அமைச்சரவையில் தி.மு.க. இடம் பெறுகிறது - என்று தமிழக மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி தெரிவித்துள்ளார்.

யார், யார் அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என்பது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி இறுதி முடிவு எடுப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையில் பங்கேற்பது குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று கருணாநிதி நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவுவதற்கு சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் அனுமதி மறுக்கப்படுவது குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:-

எத்தனையோ உள்ளூர் அமைப்புகள் அங்கு முகாம் அமைத்தல் உள்ளிட்ட பல வகையான பணிகளைச் செய்து வருகின்றன. ஆயினும் தவறான செய்திகள் ஏன் வெளிவருகின்றன என்பது தெரியவில்லை என்றார்.

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அங்கு உள்ளனரா என்பதனைக் கண்டறியும் பணிகள் தொடர்கிறது. அங்கு யார் எவர் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியாது. அதனாலேயே நாம் அங்குள்ளவர்களை ஒவ்வொருவராக ஆராய்ந்து அறிந்து வருகிறோம். இவர்கள் பற்றித் தகவல் திரட்டி அறிந்து புலனாய்வு விசாரணை நடத்த வேண்டும். இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று கணக்கிடமுடியாது - என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறினார். (அ-7)

## பத்மநாதன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் பொறுப்பாளர் பத்மநாதனின் பெயரில் ஓர் அறிக்கை இன்று (அதாவது நேற்று) வெளியிடப்பட்டுள்ளது. இதே பத்மநாதன் கடந்த 19 ஆம் திகதி பிரபாகரன் நலமாக இருக்கிறார் என அறிவித்தார்.

இந்த இடைக்காலத்தில் நடந்தது என்ன? யாருடைய நிர்ப்பந்தத்தின் பெயரிலோ, தன் நிலையை மாற்றிக் கொண்டு இவ்வாறு அறிவித்திருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

சிறிதளவு கூட நம்பகத்தன்மையற்ற இச்செய்தியை யாரும் நம்ப வேண்டாமென வேண்டிக்கொள்கிறேன்.

தலைவர் பிரபாகரன் போரில் கொல்லப்பட்டு விட்டார் என இலங்கை அரசும், இந்தியாவில் உள்ள சில ஊடகங்களும் பரப்பிய செய்திகளைப் போல இச்செய்தியும் நம்பகத் தன்மையற்றது. ஆழமான உள்நோக்கத்துடன் திட்டமிட்டு இச்செய்தி பரப்பப்படுகின்றது என்பதை தமிழர்கள் அனைவரும் உணரவேண்டும்.

பிரபாகரனின் சக தளபதிகளைத் தவிரவேறு யாருக்கும் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடும் உரிமை இல்லை. வேறு யார் என்ன அறிவித்தாலும் அதை நம்ப வேண்டிய அவசியம் இல்லை.

பாதுகாக்கப்பட்ட வலயங்கள் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர். போர் முடிவுக்கு வந்துவிட்டது எனக் கூறி உலக நாடுகளை ஒருபுறம் ஏமாற்றிக்கொண்டு மறுபுறம் எஞ்சியிருக்கும் தமிழ் மக்கள் மீதும் கொலைவெறித்தாக்குதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கொடுமைகளையெல்லாம் மறைப்பதற்காகவும், திசைதிருப்புவதற்காகவும் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என பொய்யான செய்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன - என்று உள்ளது. (அ-சி)

## கனகரட்ணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்துவந்தார். ஆனால், கடந்த இரண்டு வாரங்களாக அவர் பற்றிய எத்தகவலும் இல்லாமல் இருந்தது.

இந்நிலையில் அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் சனிக்கிழமை எமது மறைந்த எம்.பி.பத்மநாதனுக்கு அஞ்சலி செலுத்த மலர்ச்சாலைக்கு வந்திருந்தார்.

அவர் உயிருடன் இருக்கிறார் என்ற உண்மையை அறிந்து நாம் மகிழ்ச்சியடைந்தோம். இருப்பினும் அவரது உடல் தோற்றத்தைப் பார்த்து மிகவும் கவலையடைகிறோம்.

அவர் உடல் மெலிந்து கறுத்துப் போய் மிகவும் பரிதாபகரமாகக் காணப்பட்டார். அவரைப் பார்க்கும்போது இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் உள்ள இரண்டு லட்சம் மக்களும் எந்த நிலையில் உள்ளார்கள் என்பதை உணரமுடிகிறது.

62 வயதுடைய அவர் 85 வயதுக்காரர் போல் தோற்றமளிக்கின்றார். அவர் வன்னியில் மக்களுடன் சேர்ந்து அதிகளவு கஷ்டத்தை அனுபவித்துள்ளார் என்பது தெரிகிறது.

இவரை உடனடியாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கையில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். திங்கட்கிழமை இதை சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளோம் - என்றார். (அ-சி)

## ஐ.நா.செயலரைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. செயலாளர்நாயகம் பான்கீமூனை சந்திப்பதற்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் நேரம் ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கண்டியில் அவர் சந்திக்கச் சென்றமையால் அவரது நிகழ்ச்சி நிரலின்படி இரண்டு மணி நேரம் தாமதமாகிவிட்டது எனவும், இதனால் கூட்டமைப்புடனான சந்திப்பு இடம்பெறவில்லை எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''அதனையடுத்து நள்ளிரவு 11 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலையத்தில் ஐ.நா. செயலாளரைச் சந்திப்பதற்கு வெளியுறவு அமைச்சு அனுமதியளித்தது. இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்றபோதும் விமானநிலையத்தின் விசேட விருந்தினர்கள் தங்கும் அறைக்குள் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துவிட்டது'' என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''வெளியுறவு அமைச்சின் உத்தரவின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்திப்பதற்கு வந்திருப்பதாக கட்டுநாயக்கா விமானநிலைய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியபோதும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி விசேட விருந்தினர் தங்கும் அறைக்குள் அனுமதிக்க முடியாது என அதிகாரிகள் தெரிவித்தனர். நள்ளிரவு 12 மணிவரை அங்கு காத்திருந்துவிட்டு நாங்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தோம்'' என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்திக்க அனுமதி மறுத்தமை அரசின் திட்டமிட்ட செயல் என்று அவர் கண்டனம் தெரிவித்தார்.

## இது போன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளேன். இதுபோன்ற பல இடங்களுக்குச் சென்றுள்ளேன். எனினும், இதுவரை நான் பார்த்த காட்சிகளில் இலங்கையில் உள்ளதுபோல பயங்கரமான நிலையை வேறெங்கும்பார்த்ததில்லை'' என்று தெரிவித்துள்ள பான் கீ-மூன் இடம்பெயர்ந்த அனைத்து மக்கள் குறித்தும் தான் கவலையடைகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

''அங்கு முழுமையான அழிவு ஏற்பட்டுள்ளதைப் பார்த்தேன். அங்கு மோதலின் இடைநடுவில் சிக்கி பெருமளவு மக்கள் உயிரிழந்திருக்க வேண்டும். நிச்சயமாக அப்படி ஓர் அவலம் இடம்பெற்றிருக்கலாம்'' என பான் கீ-மூன் சி.என்.என் தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தின் தேசியத் தலைவர், எமது இனத்தின் மகா புருஷர் கடந்த 17 ஆம் திகதி இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் உயிர் துறந்த செய்தி எமக்குத் தெரிந்த நண்பர்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டது. தலைவர் வீரமரணம் அடைந்துவிட்டார்.

எமது தலைவர் தனது இரு வெற்றிப் புதல்வர்களை போர் முனைக்கு அனுப்பினார். அந்த வெற்றிப் புதல்வர்கள் எம் தலைவரின் மடியில் வந்து வீழ்ந்தார்கள். சிங்கள இராணுவத்தின் குண்டடிபட்டிருந்த போதிலும் மனந்தளராது எமது தலைவர் தாம் முன்வைத்த தமது விடுதலைப் போராட்டத்தை - எமது மக்களின் விடிவை நோக்கி, எம்மக்களின் சுதந்திரத்தை நோக்கி தான் எடுத்த போராட்டத்தைத் தொடர்ந்து சிங்கள இராணுவத்துடன் போராடி, சண்டையில் வீரமரணமடைந்தமை, எமது தமிழினம் மிகவும் கவலை அடைந்த நேரத்திலும் ஒரு வீர மகா புருஷரை தமிழினம் கண்டது ஒரு வகையில் எமது இனத்துக்குப் பெருமை தான்.

கேள்வி: அவரது குடும்பம் முற்றுமுழுதாகக் கொல்லப்பட்டதாக சில செய்திகளும் இரண்டுபேர் மட்டும் தான் கொல்லப்பட்டார்கள் என்று வேறு சில செய்திகளும் கூறுகின்றன. அவரது மனைவி மற்றும் அவரது மகள் பற்றிச் சொல்லவில்லையே?

பதில்: அவரது மனைவி மற்றும் இளையமகன் பாலா இவர்கள் பற்றிய செய்திகள் இன்னும் தெரியவரவில்லை.

கேள்வி: இதுதவிர விடுதலைப் புலிகளின் மற்றைய தலைவர்களான பொட்டு அம்மான் உட்பட பிற தளபதிகள் பற்றி அரசாங்கம் சொல்லும் கூற்று உண்மையா?

பதில்:என்னைப் பொறுத்தவரை எனக்குக் கிடைத்த தகவல்களின்படி தளபதிகள் பொட்டம்மான், சூசை போன்ற வர்களும் தலைவனின் பாதையில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

கேள்வி: நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் சரணடைய முன்வந்ததாகவும் சரணடைய முன்னேறும்போது அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளிவருகின்றனவே?

பதில்: பா.நடேசன், புலித்தேவன் ஆகிய இருவரும் அங்குள்ள நிலைமைகளை என்னுடன் பேசினார்கள். அதன் பின்னரே இலங்கை அரசாங்கத்தினால் எமது மக்கள் படும்துயரங்களை, உயிரிழப்புக்களைத் தாங்கமுடியாத துக்கத்தில் தாம் இலங்கை அரசாங்கத்துடன் போரை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் இலங்கை இராணுவத்துடன் பேசுவதற்காக வெள்ளைக் கொடியுடன் சென்ற போது இலங்கை அரசாங்கம் அவர்களை சுட்டுக்கொன்றது.

கேள்வி: இங்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அது பற்றி உங்களால் ஏதேனும் கூறமுடியுமா?

பதில்: சரணடைய அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை இராணுவத்துடன் பேசுவதற்காக என்மூலம் சில முயற்சிகளை எடுத்தபோதுதான் எமது சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் பேசப்பட்டது. அவர்கள் வெள்ளைக் கொடியுடன் வந்து இலங்கை இராணுவத்துடன் பேசும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் அங்குசென்றார்கள்.

கேள்வி: சரி, இப்பொழுது இந்த நிலைமையில் உங்களுடைய அமைப்பின் எதிர் காலத்தைப் பற்றி என்ன செய்ய இருக்கிறீர்கள்?

பதில்:- எமது தேசியத் தலைவர், சிரேஷ்ட தளபதிகள், போராளிகள் எல்லோரும் என்னிடம்கேட்டுக்கொண்டது எமது மக்களுக்கு எமது மக்கள் மானிடப் பிறவிகளாக, ஒரு மனித இனத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய கௌரவம், மரியாதையுடன் வாழ்வதற்கு அவர்கள் மற்ற இனத்துடன் சமமாக வாழ்வதற்கு, நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்று கூறினார். நாம் எமது மக்களுக்கு அந்த உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை எடுப்போம்.

கேள்வி:- இப்பொழுது உங்களது அமைப்பு என்பது முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருக்கிறது. உங்களது தளபதிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உங்களது அணிகள் எல்லாம், ஏறக்குறைய 20 ஆயிரம் பேர், கொல்லப்பட்டிருக்கிறார்கள். இனி வரப்போகும் நிலைமை என்ன?

பதில்:- புலிகளின் ஆயுதப் போராட்டம் இன்று இலங்கை அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டது எல்லோரும் ஏற்றுக் கொண்ட ஒன்று. நாம் அதனைப் புரிந்து கொண்டோம். எமது போராளிகள் இன்னும் மக்களுடன் மக்களாக இருக்கின்றார்கள். எமது மக்கள் எம்முடன் இருக்கின்றார்கள். எனவே நாம் ஜனநாயக, அதேநேரம் சமாதான ரீதியில் ஒரு போராட்டத்தைத் தொடர்ந்தே முன்னெடுத்துக்கொண்டு இருக்கிறோம்..

கேள்வி:- ஆயுத ரீதியிலான போராட்டம் முடிவுக்கு வந்து விட்டதை அடுத்து இனி மேலும் அடுத்த கட்ட போராட்ட மென்பது அரசியல் ரீதியான அஹிம்சைப் போராட்டம்தான் என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒத்துக்கொண்டிருக்கிறதா? ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதா?

பதில்: ஏற்கனேவே அறிவித்தபடி நாம் போர்க் கருவிகளைக் கீழே வைத்து விட்டோம். நாம் வன்முறை தவிர்ந்த ஏனைய வடிவங்களில் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்ந்து முயற்சிகள் எடுப்போம்.

நாம் வெற்றி தோல்வி களை ஆராய்ந்து பார்ப்பது வழக்கம். எமது இந்தப் பாரிய தோல்விக்குரிய காரணங்களையும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். அதன் போது அதன் குறைகள் வெளியே வரும்.

கேள்வி: எதிர்வரும் காலங்களில் எங்கிருந்து இயங்கப் போவதாக நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள்? இந்த அமைப்பின் தலைமை என்பது எப்படி இருக்கும்?

பதில்: ஒரு கூட்டுத் தலைமையாக இருக்கும். அது எங்கே இயங்கும் என்பது பற்றி நான் உடனே கூறமுடியாது - என்றார். (அ-7).

## அகதி முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தனது பணியாளர்களுக்குத் தடையற்ற அனுமதி வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

''பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர் ஐ.நா. பணியாளர்களை இந்த முகாம்களுக்கு அனுமதிப்பதில் இலங்கை அரசுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆனால், அந்த முகாம்களில் மக்களுடன் சேர்ந்து வந்துள்ள புலி உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்களை அங்கிருந்து அகற்றி, வேறு நலன்புரி முகாம்களுக்கு அனுப்பிய பின்னரே ஐ.நா.பணியாளர்கள் முகாம்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும்'' என்று அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


படிவங்கள் விற்பனையாகிறது

1 மதுவரித்திணைக்கள பங்களா காவலாளர் பதவி
2 உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு தகவல் உத்தியோகத்தர் பதவி
3 சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சில் தொழில் பயிற்சிக்கு மாணவர்கள் ஆட்சேர்ப்பு
4 விவசாயக் கல்லூரிக்கான அனுமதி விண்ணப்பப்படிவம்

(சகலபடிவங்களும் வர்த்த மானியுடன் பெற்றுக்கொள்ளலாம்)

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல-04,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P--6693,2422,4374

தேசிய கல்வி நிறுவன
B.Ed. தெரிவு
போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
திங்கள் முதல் வெள்ளி 3-5 மணி வரை
ஆரம்பம்-25.05.2009- 3 P.M
திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ் வீதி, இணுவில்.

மீண்டும் அமைதியான கல்விச் சூழலில்
அறிவொளி
நல்லூர்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கலை,வர்த்தக,கணித உயிரியல் மற்றும் O/L
கணித,விஞ்ஞான, துரித மீட்டல் வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம்
செவ்வாய் 26.05.2009 3.30 P.M
★ கணக்கீடு (P.பகீரதன்)
A/L 2010 பங்குடமை சேவ்- 3:30
A/L 2011 தவிவிளைமுடிவு சு/கு சேவ்- 4:30

விற்பனையாகிறது
A/L-PHYSICS M.P.THAVASITHAN
I) HEAT-250
II) FIELD-250
III) MECHANICS-175
IV) CURRENT ELECTRICITY-250
V) HEAT ELECTRONICS ELECTRICITY-160
VI) WAVES & VIBRATION-150
VII) WAVES & VIBRATION-200
VIII) PHYSICS-SHORTNOTES-250
IX) PHYSICS-FORMULA-150
X) PHYSICS-M.C.Q-200
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல-04,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-6693,2422,4374

Take an easy step towards your Management Degree path
For Whom:- For senior and middle level executives in public and private sector organizations dealing with Business Management & Marketing.
B.Sc (Hons) in Business IT
HND in Business Management
Adv.Dip. in Business Management
Dip. in Business Management
IDM

லாவா வைத்தியசாலை
90/7, பொற்பதி வீதி, கொக்குவில்.
★ யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சிகிச்சைகள்.
★ உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
★ சகலவிதமான இரத்த சல பரிசோதனைகள்.

உங்கள் அபிமானம் வென்ற
My Computer
கணனிச் சஞ்சிகையின் 9வது இதழ் வெளிவந்துவிட்டது.
திங்கள் முதல் சகல புத்தகசாலைகளிலும்.....
வெளியீடு
SPEED IT NET & 0212228358/0214591871
72/28,பணிக்கர் லேன், திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.